Registered as a news paper · பக்கங்கள்: பத்து · விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

கர்ப்பிணி தாய்மாருக்கும், சிறார்களுக்கும் ஏற்ற போஷாக்கு நிறைந்த சத்து மா
ஜீவாகாரம்

அண்ணா தொழிலகம்
இணுவில் (சி-1428) T.P.-2223565

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 புரட்டாதி 03 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றஜப் 22 (20.09.2003) சனிக்கிழமை இதழ்: 350


கனேடியத் தூதரை கைலாகு கொடுத்து வரவேற்கிறார் தமிழ்ச்செல்வன்.

# சமாதானப் பேச்சை வலியுறுத்தி தமிழ்ச்செல்வனுடன் பேசினேன்!

## வன்னி விஜயத்தின் பின் கனேடிய உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் இலங்கைக்கான கனேடியத் தூதுவர் வலேரிய ரேமண்டுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முற்பகல் 11.45 மணிமுதல் 1.15 மணிவரை இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில், சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாக வேண்டும் என்பதை வலியுறுத்தி, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனுடன் தாம் கலந்துரையாடியதாக கனேடியத் தூதுவர் ரேமண்ட தெரிவித்தார். பேச்சுவார்த்தைகள் சுமுகமாக நகர்ந்தால் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

எவ்வளவு விரைவாகப் பேச்சுக்களை ஆரம்பிக்க முடியும் என்பதற்கான சூழல்நிலை பற்றி ஆராய்வதே, தனது வன்னி விஜயத்தின் நோக்கம் என்றும் அவர் கூறினார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் நடவழிக்கைகளே குரங்குப்பாஞ்சான் விவகாரத்தை சிக்கலுகுள்ளாக்கியது!

## புலிகளின் திருமலை கட்டளைத் தளபதி கேணல் பதுமன் குற்றஞ்சாட்டுகின்றார்!

(திருகோணமலையிலிருந்து கௌதமன்)

**"சமாதானத்தில் நாங்கள் இன்னமும் நம்பிக்கை கொண்டவர்களாகவே இருக்கின்றோம். எமது மக்களின் அமைதி வாழ்வையே நாங்கள் எதிர்பார்க்கின்றோம். இதற்காக எமக்கு இடைக்கால நிர்வாக அலகு வழங்கப்பட வேண்டும். இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தவறுதலான நடவடிக்கையே குரங்குபாஞ்சான் முகாம் விடயத்தை பாரிய சர்ச்சைக்குரிய தாக்கியுள்ளது."**

**- இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பதுமன் தெரிவித்தார்.**

விடுதலைப் புலிகளின் சம்பூர் நடுவப் பணியகத்தில் நேற்று மதியம் நடைபெற்ற தமிழ், சிங்கள, ஆங்கில பத்திரிகையாளர்கள் மற்றும் பல்வேறு இலத்திரனியல் ஊடகவியலாளர்களுடான சந்திப்பிலேயே பதுமன் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் திருமலை மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர் சி.திலக்கும் கலந்து கொண்டார்.

போர்நிறுத்த உடன்படிக்கையின் பின்னர் திருகோணமலை மாவட்டத்தின் இன்றைய நிலைமை பற்றி இருவரும் செய்தியாளருக்கு விளக்கமளித்தனர்.

யுத்தம் நடைபெற்ற காலத்தில் குரங்குபாஞ்சான் முகாம் பிரதேசத்

(10 ஆம் பக்கம் பார்க்க)


நேற்றைய பத்திரிகையாளர் சந்திப்பில் திருமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பதுமனும் அரசியற்துறை பொறுப்பாளர் திலக்கும். (படம்:கௌதமன்)

## திருமலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த பொலிஸார் இருவரும் புலிகளால் விடுதலை!

விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்த பொலிஸார் இருவரும் நேற்று முற்பகல் விடுதலை செய்யப்பட்டனர்.

கும்புறுப்பிட்டி பிரதேசத்தில் வைத்து இவர்கள் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்பட்டதாக திருமலை மாவட்டபொலிஸ் அத்தியட்சகர் உபாலி ஹேவகே தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உபாலி ஹேவகேக்கும் விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக்குக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற பேச்சுவார்த்தையை அடுத்து, இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

திருகோணமலை மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனைக்கு

# அரசு சாதகமாகப் பதிலளிக்காதுவிட்டால் 840 கரும்புலிகள் கொழும்பை தாக்குவர்!

## சுதந்திரக் கட்சியின் மங்கள சமரவீர கூறுகிறார்

(கொழும்பு)

இடைக்கால நிர்வாக யோசனை தொடர்பாக அரசாங்கத்திடமிருந்து சாதகமான பதில் கிடைக்காவிட்டால் - கொழும்பு, திருகோணமலை நகரங்களில் பாரிய, தாக்குதல்களை நடத்த விடுதலைப் புலிகள் தயாராகி வருவதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதான அமைப்பாளர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

இந்தத் தாக்குதல்களுக்காக இரண்டு வருடங்கள் பயிற்சிபெற்ற 840 கரும்புலிகளை, தாஸ் என்பவரின் தலைமையில் புலிகள் கொழும்புக்கு அனுப்பிவைத்திருப்பதாக தமக்கு நம்பகமாகத் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் அவர் கூறினார். எனவே, இந்தத் தகவல்கள் குறித்து அரசாங்கம் விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

## கொழும்புக்குள் 840 கரும்புலிகளா? நிராகரிக்கின்றார் அமைச்சர் ரவி!

தாக்குதல் நடத்துவதற்காக 840 உறுப்பினர்களை கொழும்பு, திருகோணமலை நகர்களுக்கு விடுதலைப் புலிகள் அனுப்பிவைத்திருப்பதான மங்கள சமரவீர வின் குற்றச்சாட்டு எவ்வித அடிப்படையும் அற்றதென நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் கடந்த 16 மாதங்களாக யுத்த நிறுத்தத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதைப் பொறுக்கமுடியாத மங்கள சமரவீர, மக்களைத் தவறான (10 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்


மங்களவுக்கு நல்லா கனவு வருது போல....!

## சமாதான முயற்சிகளுக்கு பிரிட்டனும் ஆதரவு!

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்றுவரும் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு பிரிட்டன். பூரண ஆதரவு வழங்குமென பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் தெரிவித்தார்.

தற்போது லண்டன் விஜயத்தை மேற்கொண்டுள்ள அமைச்சர் பீரிஸ், பிரிட்டிஷ் வெளியுறவு இராஜாங்க அமைச்சர் மைக் ஒப்பேறினைச் சந்தித்துப் பேசிய போதே, பிரித்தானிய வெளியுறவு அமைச்சர் இவ்வாறு கூறினார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 012360290 012360291
email jaffna @ expoavi . com.
(சி -1423)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...

# அடியார்க்கு அருள்பாலிக்கும் சாட்டி சிந்தாத்திரை மாதா

**சாட்டி சிந்தாத்திரை மாதா ஆலயத்தின் திருவிழா இன்றாகும். இதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**



லைடன் தீவிலுள்ள - வேலணையில் காணப்படும் சிற்றூர்தான் சாட்டி. இங்கேதான் அனைவருக்கும் அருள்பாலிக்க, எழிமையே உருவாகி "சாட்டிமாதா" என்று அனைவராலும் அழைக்கப்படும் சிந்தாத்திரை மாதா ஆலயம் காணப்படுகிறது.

போர்த்துக்கேயரின் மாதா சொரூபம்

16 ஆம் நூற்றாண்டில்- போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தை கைப்பற்றியபோது, சாட்டியிலே தமது கோட்டையினைக்கட்டி, அங்கே வசித்துவந்தனர். தமது பயணத்தின் போது தம்மை பாதுகாக்க வேண்டி, எப்போதும் ஒரு சொரூபத்தை தமது பிராத்தனை அறையில் வைத்து வேண்டுதல் செய்து வந்தனர். அதுதான் நாம் இன்று வழிபடும் சாட்டி மாதா ஆகும்.

தொடர்ந்து யாழ்ப்பாணப் பகுதி, ஒல்லாந்தரினால் கைப்பற்றப்பட்ட போதும், சாட்டியிலிருந்த போத்துக்கேயருடைய கோட்டையும் அவர்களால் தகர்த்து எறியப்பட்டது. இக்கோட்டை தகர்க்கப்பட்டு, ஏறக்குறைய 200 ஆண்டுகளின் பின்னர் - இக்கோட்டை துப்பரவு செய்யப்பட்ட போது, அந்த இடிபாடுகளின் மத்தியிலிருந்து எவ்வித சிறிய காயமுமின்றி சிந்தாத்திரை மாதா 'சொரூபம் வெளியே எடுக்கப்பட்டது. இச்சொரூபத்தினை, அப்பகுதி மக்கள் மிகவும் பக்தி பூர்வமாக ஒரு ஓலைக் கொட்டகையிலே வைத்து வழிபாடுகள் செய்தனர்.

இப்படியே இவர்கள் இந்த ஆலயத்தினை நிறுவி வருகின்ற கால கட்டத்திலே, இவர்களுடன் இருந்த மூத்தாவி என்கிறவர் ஒரு உயர்ந்த கம்பம் (தடி) ஒன்றை நாட்டுகை செய்து, அதன் முனையிலே மணி ஒன்றினை கட்டி, அங்கேயிருந்த மக்கள் அனைவரையும் ஒன்றுகூட்டி அந்த ஆலயத்திலே வழிபாட்டினை நடாத்திவந்தார்.

இதன் பின்னர் மாதாவினுடைய பக்தர்கள் - இவ்வோலைக் குடிசைக் கோயிலை சிறந்த ஒரு கோயிலாக கட்டவேண்டும் என்று திட்டமிட்டனர். இதன் விளைவாக, 1789 ஆம் ஆண்டு ஒரு கல்லினாலே சிறிய ஆலயம் நிறுவப்பட்டது. ஆனால்,

**எவ்.எக்ஸ்.சுதர்சன்**

துரதிஸ்டவசமாக 1886 ஆம் ஆண்டு, இக்கோயில் தீப்பிடித் தது. இதன் பின்னர் இவ்வாலயம் அந்தோனி அடிகளாரின் காலத்தில் (1928), ஆலயப் புனரமைப்பு வேலை நடைபெறத்தொடங்கியது. பக்தர்களின் நல்லுள்ளங்களினால் ஆலயம் மென்மேலும் புதுப் பொலிவு பெறத் தொடங்கியது.

பல மக்கள் தாமாகவே முன் வந்து, அன்பளிப்புக்களை அள்ளி வழங்கினார்கள். இதன் பின்னர் 1946 இல் ஊர்காவற்றுறை கரம்பனைச் சேர்ந்த, பஸ்ரியன் என்பவருடைய அன்பளிப்பில் ஆலயம் வளர்ச்சி பெறத்தொடங்கியது. வரலாற்று சான்றுகளின்படி, இவருடைய அன்பளிப்பில்தான் இன்றும் காணப்படுகின்ற திறந்தவெளிமண்டபம் கட்டப்பட்டது. 1974 இல் அன்னையின் புகழ் எங்கும் பரவியது. அலை அலையாக பக்தர் கூட்டம் ஆலயம் வந்து சென்றது. இதன் பின்னர், றெஜிஸ் இராஜநாயகம் அடிகள் சாட்டிமாதா கோயில் பரிசகராக இருந்தபோது, குருக்கள் இல்லறத்தோடு கூடிய தங்குமிடம் கட்டப்பட்டது.

1990 காலப்பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையால், இடம் பெயர்ந்த ஊர்காவற்துறை, கரம்பன், சுருவில் ஆகிய பகுதிகளை சேர்ந்த மக்கள், மாதா ஆலயத்தில் தங்கினர். அப்போது இராணுவத்திற்கு சொந்தமான வான் ஊர்தி (ஹெலிக்கொப்டர்) ஒன்று ஆலயத்தின் மேல் ரொக்கட் தாக்குதலை மேற்கொண்டு, பல உயிர்களை பறித்தது. 1990 தொடங்கி 1995 வரை அப்பகுதி மக்கள் அங்கு வசிப்பதற்கு ஏதுவான சூழ்நிலை இருக்கவில்லை. எனவே- அன்னையினுடைய ஆலயமும், பராமரிப்பு அற்றுப்போனது. 1995 இன் பின்னரே - மக்கள் மீண்டும் அன்னையின் ஆலயப்பகுதிக்குச்செல்ல அனுமதிக்கப்பட்டனர். இதன் திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற்றன. திருநாள் திருப்பலிகளை ஒப்புக்கொடுக்க, மேடை ஒன்றும் அமைக்கப்பட்டது. பின்னர் 2000 ஆம் ஆண்டு யாழ். ஆயர் அவர்களால், பலன்களை தரும் யாத்திரைத் தலமாக சாட்டி சிந்தாத்திரைமாதா கோவில் பிரகடனம் செய்யப்பட்டது.

THE ROYAL COLLEGE OF JAFFNA
ஆண்டு 1 இல் இருந்து மேற்படிப்பு வரை சிறந்த ஆசிரியர்கள், சகல பாடங்கள்.
426 (302), K.K.S. Road, Jaffna. (சி-1457)

## அஞ்சலி நிகழ்வும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

அமரர் கு.வன்னியசிங்கம், திருமதி கோமதி வன்னியசிங்கம் அவர்களின் அஞ்சலி நிகழ்வும் தையல் பயிற்சியில் சித்தியடைந்த மாணவிகளுக்கான பரிசளிப்பு விழாவும், நாளை நடைபெறவுள்ளது.

நல்லூர் சந்தையில் அமைந்துள்ள வன்னியசிங்கம் பொதுப்பணி மன்றத்தில் நாளை மாலை 4.30 மணிக்கு இந்த நிகழ்வு நடைபெறும்.

யாழ்.பல்கலைக்கழக பீடாதிபதி இ.க.சிற்றம்பலம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் நினைவுரைகளைப் பலர் ஆற்றுவதுடன், தையல் பயிற்சியில் சித்தியடைந்த மாணவிகளுக்கான சான்றிதழ்களை மாநகர சபை ஆணையாளர் இ.இராமலிங்கம் வழங்குவார்.

ராஜா யாழ்ப்பாணம்.
அருண், வடிவேல், விஜயகுமார் நடித்த
அன்பு
காட்சிநேரம் 10.30, 2.30, 6.30. 9.30 (பு.நே) (சி-1424)

நிறஞ்சனாஸ் சங்கானை
விஜயகாந், ப்ரீதா நடித்த
தர்மா
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
ULTRA FORCE- 2 (சி-1425)

## ஈழம் ஈன்றெடுத்த இணையற்ற மாமனிதன்



நல்லூரில் மக்கள் கடல்போல நிறைந்திட...
வல்லூறாய்த் "தும்பிகள்" வானில் பறந்திட...
எல்லோரின் மனமும் துயரில் அமிழ்ந்திட...
எளிய பயணம் தொடங்கினான் திலீபன்.

நல்லவழி "அகிம்சை" என்றோதும் நாட்டவரை
வெல்லவழி தேடித் தியாகப்போர் மூட்டியவன்
மல்லிகை இதழ்கள் மழைநீரைக் காணாமல்
மெல்ல உதிர்வது போல் உணர்விழந்து வந்தான்

சொட்டுநீர் கூடச் சுவைக்காது நாள் முழுவதும்
பட்டினியால் பிள்ளை பசுந்தளிராய் வாடியது
கட்டிலருகே கல்லாய் நாம் இருக்க
மொட்டான மலரொன்று முகையிலே விழுகிறது.

தாகத்தால் உயிரொன்று தவிப்பதைக் கண்டு
சோகப்புயலங்கே சுற்றிவர வீசியது!
தேகம் தளர்ந்தாலும் தெளிவான சிந்தையது
வேகமுடன் நின்று விழிப்பாக ஆடியது!

ஈழம் ஈன்றெடுத்த இணையற்ற மாமனிதன்...
வேழமென நின்று மேடைகளில் முழங்கியவன்...
சோளப்பொரிபோல் சோர்ந்து கிடந்தாலும்
காலம் அவனுணர்வைக் காயாமல் வைக்கிறது.

பன்னிரண்டு நாட்கள் படுத்திருந்த திலீபன்
கண்ணிரெண்டை மூட கனலொன்று மூள்கிறது!
தன்னுயிரைத் தமிழின் விடிவுக்குத் தந்தவனின்
பொன்னுடலைப் பார்க்க மக்களலை பொங்கியது!

ஏக்கமுடன் நெஞ்சை இறுக்கியே பொத்தியோரும்
பார்த்த பொழுது பதறியே துடித்தோரும்...
துக்கமது தாழாமல் துவண்டங்கே விழுந்தோரும்
காத்திருந்த வேளையதில் கல்நெஞ்சை வாட்டியது!

றெ.நிசாந்தன்
நல்லூர்

ஊர் உலா
ttn
ஈழத்துக் கவிஞர்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்
தமிழ்த் தொலைக் காட்சி இணையத்திற்காக
(ttn) 'டியிற்றல் மீடியா நெற்வேக்' நடாத்தும்
'ஊர் உலா' கவிதை நிகழ்ச்சியில் நீங்களே தோன்றி
கவிக்கேற்ற காட்சிப் பின்னனியுடன் உங்கள்
மன எண்ணங்களை வெளிப்படுத்துங்கள்.
உங்கள் கவிதைகளை
150 சொற்களுக்குட்பட்டதாக.....
இன்றைய சமாதான முன்னெடுப்புக்கள்,
தாயக விடுதலை,எமது மொழி, கலைபண்பாட்டை
வெளிப்படுத்துபவையாகவும்,
உங்களூர்ச் சிறப்புப் பற்றியும்......
எழுதியனுப்புங்கள்.
உங்கள் பேச்சுவழக்கில்,காட்சிப் படுத்தலை
மையமாக வைத்து அமைந்திருத்தல் நன்று.
உங்கள் முகவரியுடன்
எமக்கு அனுப்பவேண்டிய முகவரி → 'ஊர் உலா'
'டியிற்றல் மீடியா நெற்வேக்'
231, கோவில் வீதி
நல்லூர்
யாழ்ப்பாணம்
முடிவுத் திகதி: 05.10.2003
தொலைபேசி இல. 021 222 3919

பற்களில் பழுதுண்டா? விழுந்துவிட்டனவா? முன்பைவிட உறுதியான, அழகான வெண் சங்குப்பற்களைக் கட்டிட இளைய தலைமுறைகளே! மிதப்புப் பற்களா? அழகிய அமைப்பைப் பெற்று உறுதிமிக்க பற்கிளிப்புக்களைப் பொருத்திட
எரிக்கணேஷ்
கிளைகள்:
பழைய பொலிஸ் நிலையம் முன்பாக,
இல.80 கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம்.
இல.91, கே.கே.எஸ்.வீதி,
கொக்குவில் சந்தி,
கொக்குவில்.
மூக்குக்கண்ணாடி அகமும், பல்கட்டுமிடமும்
564, 566 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.2486
சி-1567

தியாகத் திருவுருவே...



திலீபா!
உன் நினைவுகள்
எம்மின விடுதலையின்
கலங்கரை விளக்காய்
என்றும் ஒளிரட்டும்.
வடமாகாண கடற்தொழிலாளர்
கூட்டுறவு சங்கங்களின் சமாசம்.
(489)

## திலீபன் மருத்துவமனையில் நான்கு மகப்பேற்றுப் பிரசவங்கள்

மாங்குளத்தில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபன் மருத்துவமனையில் - அண்மைக்காலங்களில் 4 மகப்பேற்றுப் பிரசவங்கள் நடைபெற்றதாக, வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

போக்குவரத்து வசதி, சுகாதார வசதி மிகவும் குறைந்த இந்தப் பகுதி மக்களுக்கு- இந்த மருத்துவமனை அளப்பரிய சேவையாற்றிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (122)

## நவராத்திரி தின நிகழ்வுகள்

சரசாலை இலந்தைத்திடல் ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலயத்தில் - எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் நவராத்திரிதின நிகழ்வுகள் வெகு சிறப்பாக நடைபெறவுள்ளன. தினமும் காலையில் சங்காபிஷேகமும், மாலையில் இயந்திர பூசையும் இடம்பெற்று, தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக, ஆலயப் பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக்குருக்கள் தெரிவித்தார். (24)

### அஷ்ரப்பின் நினைவுதின நிகழ்வில் கலந்துகொள்ள வந்திருந்த

# ஜனாதிபதி சந்திரிகாவையும். பிரதமர் ரணிலையும் வெளியேறவிடாது முஸ்லிம் மக்கள் ஆர்ப்பாட்டம்!

முன்னைய முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகத் தலைவர் அஷ்ரப்பின் 3 ஆம் ஆண்டு நினைவுதின நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி சந்திரிகவையும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் வெளியேறவிடாது முஸ்லிம் மக்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தச் சம்பவத்தையடுத்து 5 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் அஷ்ரப்பின் மூன்றாவது ஆண்டு நினைவு தினமும், முத்திரை வெளியீடும் - நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள இன்ரகொண்டினென்ற் ஹோட்டலில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜனாதிபதியும், கௌரவ விருந்தினராக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கலந்துகொண்டனர்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் கொல்லப்பட்டு மூன்று வருடங்களாகியும், கொலைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவும் இல்லை எனவும், இந்தச் சம்பவம் தொடர்பாக யாரும் இதுவரை கைது செய்யப்படவில்லை என்றும் தெரிவித்தே முஸ்லிம் மக்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி சந்திரிகாவையும், பிரதமர் ரணிலையும் வெளியேறவிடாது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தடுத்தனர். இதனையடுத்து பொலிஸார் தடியடிப் பிரயோகம் செய்து, மறியற் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை விரட்டியடித்தனர். இதன்பின்னரே ஜனாதிபதியும், பிரதமரும் வெளியேறினர்.

மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பாக 5 பேரைப் பொலிஸார் கைதுசெய்து விசாரணை செய்துவருகின்றனர். (01)

## வீதியைப் புனரமைக்கக் கோரி ஆணையாளருக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

நாயன்மார்கட்டு வீதியை புனரமைப்புச்செய்யுமாறு கோரி-

அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் தலைவர் அப்பாததுரை விநாயகமூர்த்தி, யாழ்.மாநகர சபை ஆணையாளருக்கு மகஜரொன்றை அனுப்பியுள்ளார்.

நீண்டகாலமாக புனரமைக்கப்படாத காரணத்தால், போக்குவரத்து செய்வதில் பல சிரமங்களை எதிர்நோக்கும் பயணிகளின் நன்மை கருதி-

நாயன்மார்கட்டு வீதியைப் புனரமைப்புச் செய்யுமாறு இந்த மனுவில் கோரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

### வவுனியா நகரில்

# பொங்குதமிழ் ஏற்பாட்டுக்குழுவினர் மீது படையினரின் கெடுபிடிகள் அதிகரிப்பு!

(வவுனியா)

வவுனியா பொங்குதமிழ் ஏற்பாட்டுக்குழுவினரின் அலுவலகம் அமைந்துள்ள பூங்கா வீதியில், நேற்று முன்தினம் மாலை 3 மணியளவில் இராணுவத்தினர் தற்காலிகமாகச் சோதனை நிலையம் ஒன்றினை அமைத்து, மக்களைச் சோதனையிட்டனர். அத்துடன், பொங்குதமிழ் ஏற்பாட்டுக் குழுவினரின் அலுவலகத்திற்குச் சென்று வந்தோரையும் புகைப்படம் பிடித்தனர்.

இவ்வாறு புகைப்படம் எடுத்தும், சோதனை நடவடிக்கைகளிலும் ஈடுபட்ட இராணுவத்தினருடன் - பொங்கு தமிழ் ஏற்பாட்டுக் குழுவினர் வாக்குவாதப்பட்டதுன், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிற்கும் அறிவித்தனர். அவ்விடத்திற்கு வந்த போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு - நிலைமையை ஏற்பாட்டுக் குழுவினர் எடுத்துவிளக்கினர்.

இதன்போது, கண்காணிப்புக் குழுவினர்- படையினரிடம் ஏன் இவ்வாறு நடந்து கொள்கிறீர்கள் எனக் கேட்டபோது - திடீரெனச் சண்டை ஒன்றுவந்தால், நிலைமையை எவ்வாறு சமாளிப்பது என்ற ஒத்திகையாகவே இதனை நாம் செய்தோம் எனக்கூறினர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் - பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, இதுபோன்ற சம்பவம் இனிமேல் நடைபெறமாட்டாது என அவர் தெரிவித்தார்.

இதேவேளை - நேற்று முன்தினம் வவுனியா மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப் புக்குழு அலுவலகத்தில் - பொங்கு தமிழ் ஏற்பாட்டுக்குழுவினருக்கும், இராணுவத்தின் தேசிய காவல்படையைச் சேர்ந்தவர்களுக்குமிடையே சந்திப்பொன்று நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# திருமணத்தன்று நள்ளிரவுவேளை மணமகன் நகைகளுடன் மாயம்!

### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

திருமணம் நடைபெற்ற அன்று நள்ளிரவே மனைவியை உறக்கத்தில் விட்டு, நகைகளை அபகரித்துக் கொண்டு தலைமறைவானார் மணமகன்.

நேற்றுமுன்தினம் இரவு வவுனியா சிதம்பரபுரத்தில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

குடும்பத்தில் ஒரேயொரு பெண்பிள்ளைக்கும், திருகோணமலை குச்சவெளியைச் சேர்ந்த இளைஞன் ஒருவருக்கும் திருமணம் நடைபெற்றது.

மிகவும் ஆடம்பரமாக நடைபெற்று முடிந்த திருமணத்தை அடுத்து,

நள்ளிரவுக்குப்பின் மனைவி உறங்கிய பின்னர் - அவரது கழுத்திலிருந்த நகைகள் மற்றும் பெட்டி ஒன்றில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த சுமார் 30 பவுண் நகைகளைத் திருடிக்கொண்டு, மணமகன் தலைமறைவாகிவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மணமகள் வீட்டார் - வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதையடுத்து, தலைமறைவான இளைஞனைப் பிடிப்பதற்குப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கண்டியிலிருந்து கொழும்பு நோக்கி சமாதானத்திற்கு எதிரான ஊர்வலம்!

எதிர்வரும் 27 ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 5 ஆம் திகதி வரை, கண்டியிலிருந்து கொழும்பு நோக்கிச் சமாதான ஒப்பந்தத்திற்கு எதிரான ஊர் வலம் ஒன்று நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜே.வி.பியினரும், எல்லே குணவன்ச தேரரும், தினேஷ் குணவர்த்தனவும் கடந்த புதன்கிழமை சந்தித்தபோதே, இந்த ஊர்வலத்தை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டதாகத் அறியப்படுகிறது.

இந்த ஊர்வலத்தில் - சிறிலங்கா சுதந்திரக்கட்சியினரும் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - சுதந்திரக் கட்சியினர் இந்த ஊர்வலத்தில் கலந்துகொள்வதை விரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில், சிறிலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்தவர்கள், தமது கட்சி உறுப்பினர்களாக அன்றி, நாட்டு நலனின் அக்கறை கொண்டவர் என்ற நிலையில் கலந்துகொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

## கோழிக்கூடுகள் அன்பளிப்பு

(இளவாலை)

இளவாலை ஜே/155 கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட - கணவனை இழந்த மற்றும் கணவனால் கைவிடப்பட்ட இருபத்து ஆறு குடும்பப் பெண்களுக்கு - ஐரோப்பிய யூனியன் நிதியுதவியுடன் இயங்கும் மூலிமொன்டா என்ற நிறுவனம், கோழிக்கூடுகளை வழங்கியுள்ளது.

இதன் அடுத்தகட்டமாக - அடுத்த வாரமளவில், இக்குடும்பங்களுக்கு முட்டைபோடும் பருவத்திலான கோழிகளும், கோழி வளர்ப்புக்கு மூன்று மாதத்திற்குத் தேவையான கோழித் தீவனமும், கத்தி, குப்பைவாரி, வாளி, புத்துவெட்டி போன்ற பொருட்களும் வழங்கப்படவிருப்பதாக - மூலிமொன்டா நிறுவன அதிகாரி தெரிவித்தார். (41)

# சீனப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்

(கொழும்பு)


சீனாவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜேரிங் வீமங், நேற்று முன்தினம் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சர் திலப் மாரப்பனவின் அழைப்பை ஏற்றே, சீனப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் இலங்கைக்கு வந்துள்ளார்.

இலங்கை, சீனா ஆகிய நாடுகளுக்கு இடையே பாதுகாப்புத் தொடர்பான விடயங்களை ஆராய்வதே - சீனப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் இலங்கை விஜயத்தின் நோக்கம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்டோ, உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க ஆகியோர், சீனப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரை வரவேற்றனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன ஆகியோரையும், சீனப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.





வன்னியில் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பிரிவிற்கு பயிற்சி வழங்கிய தாய்லாந்து நிபுணர் குழுவிற்கு தலைமை வகித்த லெப்.கேணல் சுசார்ட்டிற்கு தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜே.பி.ரெஜி நினைவுப் பரிசு வழங்குவதை முதலாவது படத்திலும் பயிற்சி பெற்றவர்களுடன் லெப்.கேணல் சுசார்ட் உரையாடுவதை அடுத்துள்ளபடத்திலும் காணலாம்.

### சுகாதார சேவை ஊழியர்களின் வேலைநிறுத்தப் போராட்டம்

# அரசாங்கத்தின் நிலைப்பாட்டிற்கு ஜனாதிபதி சந்திரிகாவும் ஆதரவு!

சுகாதாரசேவை ஊழியர்களின் வேலைநிறுத்தப் போராட்டம் தொடர்பாக அரசின் நிலைப்பாட்டிற்கு ஜனாதிபதி சந்திரிகா ஆதரவு தெரிவித்துள்ளார்.

தற்பொழுது நாடளாவிய ரீதியில் நடைபெறும் சுகாதாரசேவை ஊழியர்களின் வேலைநிறுத்தப் போராட்டம் காரணமாக வைத்தியசாலைப் பணிகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

இதுதொடர்பாக சுகாதார அமைச்சர் என்.பி.தயாரத்தின ஜனாதிபதிக்குத் தொலைபேசி மூலம் தெரியப்படுத்தியுள்ளார்.

திறைசேரியில் தற்போது நிதி நெருக்கடி நிலவுவதாகவும், இதனால் சுகாதாரசேவை ஊழியர்களின் சம்பள முரண்பாட்டை தற்போது நீக்க முடியாது எனவும் சுகாதார அமைச்சர் ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தியுள்ளார். நவம்பர் மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு செலவுத் திட்டத்தின் மூலம் - இவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுமெனவும் சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதி சுகாதார அமைச்சரினதும், அரசினதும் நிலைப்பாட்டிற்கு ஆதரவு தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, மூன்றாவது நாளாக நேற்றும் நடைபெற்ற சுகாதாரசேவை ஊழியர்களின் வேலை நிறுத்தம் காரணமாக வைத்தியசாலைப் பணிகள் பாதிப்படைந்ததைத் தொடர்ந்து - பொலிஸாரும், இராணு வத்தினரும் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

# தேசிய பிக்குகள் முன்னணியினர் திருமலையிலும் சத்தியாக்கிரகம்!

இடைக்கால நிர்வாகசபை- விடுதலைப் புலிகளிடம் வழங்கப்படுவதை எதிர்த்து, தேசிய பிக்குகள் முன்னணியைச் சேர்ந்த பிக்குகள், சத்தியாக்கிரகப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

திருகோணமலை நான்காம் மைல்கல் என்ற இடத்தில், திருமலை தேசிய பிக்குகள் முன்னணி அமைப்பின் தலைவர் கனுமுல்தெனிய பஞ்ஞதிஸ்ஸ தேரர் தலைமையில் இந்த சத்தியாக்கிரகப் போராட்டம் இடம்பெற்றது.

நேற்று முன்தினம் மாலை 4.20 மணிக்கு ஆரம்பமான இந்த சத்தியாக்கிரகம், மாலை 5.20 மணிக்கு நிறைவு பெற்றது. இதில் 15 பிக்குகளும், 350இற்கு மேற்பட்ட பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களும் கலந்துகொண்டனர்.

இனங்களைப் பிரிக்கும் பேதம் வேண்டாம், தேசிய ஒற்றுமையே முக்கியமானது; தாய்நாட்டைப் பலிகொடுக்க வேண்டாம், நாடு முழுவதும் ஒரேநாடு - ஒரே ஆட்சி. இதில இரண்டு ஆட்சி என்ற பேச்சுக்கே இடமில்லை. புலிகளிடம் இடைக்கால நிர்வாகசபை என்ற போர்வையில், தமிழீழத்தைக் கொடுத்து, நாட்டை இரண்டாகப் பிரிக்க வேண்டாம் போன்ற கோஷங்களை இந்தச் சத்தியாகிரகப் போராட்டத்தில் எழுப்பப்பட்டிருந்தன. (4,10)

# முல்லைத்தீவு வைத்தியசாலை புனரமைப்புப் பணிகள் தாமதம்!

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் புனரமைப்பு பணிகளில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

1990 ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவம் 'கடற்காற்று' என்னும் படைநடவடிக்கையை மேற்கொண்டது. இதன்போது, முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையும் இராணுவ ஆக்கிரமிப்புக்குள் அகப்பட்டு, முற்றாகச் சேதமடைந்தது.

1996 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் 'ஓயாத அலைகள்' நடவடிக்கையால், முல்லைத்தீவு மீட்கப்பட்டபோது - அப்பகுதியில் மக்கள் மீளவும் குடியேறத் தொடங்கினர்.

மக்களின் மீள்குடியேற்றத்தைத் தொடர்ந்து, முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை- தற்காலிக கட்டடம் ஒன்றில் இயங்கிவந்தது.

தற்போது வைத்தியசாலைப் புனரமைப்புக்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலைமையில், அழிவுக்குள்ளான கட்டடங்களையும், பற்றைக் காடுகளாய் உள்ள இடங்களையும் சீர்செய்ய ஆரம்பித்தபோது, அப்பகுதியில் இருந்து இரண்டு மிதிவெடிகள் வெடிக்காதநிலையில் மீட்கப்பட்டன.

இது தொடர்பாக, மிதிவெடிகள் அகற்றும் பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டும், அப்பகுதியில் மிதிவெடிகள் அகற்றும் பணி ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்காததால், முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை- மீளமைப்புப் பணிகள் தாமதடைந்து வருவதாக மக்கள் விசனமடைந்துள்ளனர். (09)

# தென்மராட்சி மீள்குடியமர்வு கொடுப்பனவு வழங்கப்படாமையால் மக்கள் பாதிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தில் மீள்குடியமர்வு கொடுப்பனவுகள் வழங்கப்படாமையால், பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக, பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

2000 ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்தத்தால், தென்மராட்சி பிரதேசம் பாரிய அழிவுகளைச் சந்தித்தது. பல்லாயிரக்கணக்கில் இடம்பெயர்ந்த மக்கள், சமாதான சூழல் ஏற்பட்டு, புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகிய பின் மீள்குடியேறினர்.

இக்குடும்பங்களில் - 13,375 குடும்பங்கள் மீள்குடியமர்வுக் கொடுப்பனவு பெறத் தகுதியானவர்கள் என இனங்காணப்பட்டும், இதுவரை 10,000 இற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு இக்கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை.

தென்மராட்சி தெற்கு இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்துள் தங்களது வீடுகள் அகப்பட்டு, தற்போதும் இடம்பெயர்ந்து அவதிப்படும் பல குடும்பங்களுக்கு, இந்த மீள்குடியமர்வுக் கொடுப்பனவுகள் வழங்கப்படாததால், அவர்களது நிலை மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# காணித்தகராறு காரணமாக வீதிக்கு குறுக்கே படுத்த பெண்

(யாழ்ப்பாணம்)

காணித்தகராறு ஒன்றின் காரணமாக "டிரக்டர்" ஒன்றிற்கு முன்னே வீதியில் படுத்தார் குடும்பப் பெண்ணொருவர். இந்தச் சம்பவம், அண்மையில் இணுவில் பகுதியில் இடமபெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாகத் தெரிய வருவதாவது - நீண்ட காலமாகவே ஒரு பாதை தொடர்பாகத் தகராறு நடந்து வந்துள்ளது. இந்தப் பாதையில் வசிக்கும் ஒருவர், வீடு கட்டுவதற்காக டிரக்டரில் கல் ஏற்றிக் கொண்டு போன சமயமே, பகைமை கொண்ட குடும்ப பெண்- டிரக்டருக்கு குறுக்கே வீழ்ந்து படுத்துள்ளார்.

நீண்ட நேரமாக வீதியின் குறுக்கே இவர் படுத்துக் கிடந்துள்ளார். இது தொடர்பாகச் சமரசம் செய்ய முயன்ற ஊர் மக்கள் தோற்றுப்போக, பொலிஸார் வரவழைக்கப்பட்டனர். பொலிஸார் வந்து சமரசம் செய்த பின்னரேயே, குறித்த பெண் வீதியை விட்டு எழுந்ததாகக் கூறப்படுகின்றது.

முன்னரும் வலி.தெற்கு பிரதேச சபை இந்த பாதையை செப்பனிட முயன்ற போதும், இப்பெண் இவ்வாறு நடந்து கொண்டாகவும் தெரிவிக்கப்படுகிறது. அதனால், நீண்ட பாதையின் ஒரு பகுதி மட்டும் திருத்தப்படாமல் - குண்டும் குழியுமாகக் காணப்படுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இச்சம்பவங்கள் தொடர்பாக ஊர் மக்களும், இளைஞர்களும் விசனம் தெரிவித்துள்ளனர்.



தென்னிந்திய திருச்சபையின் நெடுந்தீவு மத்தி சிறுவர் பகல் பராமரிப்பு நிலைய விளையாட்டுப் போட்டிகளின்போது - சிறுவர்கள் உடற்பயிற்சிக் காட்சியில் ஈடுபடுவதை முதற்படத்திலும், கயிறிழுத்தல் போட்டியில் பங்குகொள்வதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# சின்னஞ்சிறு செய்திகள்

## திருநெல்வேலியில் கமத்தொழில் வங்கி

விவசாய அமைச்சினால் கமத்தொழில் வங்கியொன்று திருநெல்வேலியில் நிறுவப்படவுள்ளது.

குடாநாட்டில் நிறுவப்படவுள்ள நான்கு கமத்தொழில் வங்கிகளில், முதற்கட்டமாக இது அமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வங்கி மூலம், நல்லூர் கமத்தொழில் சேவை நிலையத்திற்குட்பட்ட விவசாயிகள் நன்மைபெற முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலியில் அமைந்துள்ள விவசாய உள்ளீடுகள், மருந்து வகைகள், விற்பனை நிலைய கட்டடத்தொகுதியிலேயே - இவ்வங்கி இயங்கவுள்ளதாக, நல்லூர் கமத்தொழில் சேவை நிலைய தலைவர் க.சத்தியானந்தசிவம் தெரிவித்துள்ளார். (58)

## சாரணர்களின் பாசறை விழா

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தின் 23 ஆவது மாவட்ட சாரணர் பாசறை விழாவும், குருளை சாரணர் வெளிக்கள நாளும் நேற்று ஆரம்பமாகின. மூன்று நாட்கள் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இந்த நிகழ்வு இடம் பெறவுள்ளது.

நாடகம், போட்டிகள், விளையாட்டுக்கள் என்பன நடைபெற்று, பரிசளிப்பும் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்ச்சிகளைப் பிற்பகல் வேளைகைளில் வெளியார் சென்று பார்வையிடமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேச செயலகப் பிரிவுக்கான பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம், செயலக மண்டபத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தக்கூட்டத்தில் - சுகாதார சேவைகள், மின் விநியோகசேவை, வீதி அபிவிருத்தி சேவைகள், போக்குவரத்துச் சேவைகள் மற்றும் ஏனைய சேவைகள் தொடர்பாக ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சகல திணைக்களத் தலைவர்களுக்கும், இது தொடர்பான அறிவித்தல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (113)

## நிரந்தர இடத்தில் இயங்க முயற்சி

நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தை, நிரந்தரப் பொலிஸ் நிலையமாக அமைப்பதற்கான முயற்சிகளைப் பொலிஸ் திணைக்களம் மேற்கொண்டுவருகிறது.

அண்மையில், கரவெட்டிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கலந்துகொண்ட, நெல்லியடிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் பிரதிநிதி லோகநதி இத்தகவலைத் தெரிவித்தார். மேற்படி பொலிஸ்நிலையம் அமைப்பதற்கான காணியோ அல்லது வீடோ நெல்லியடி மத்திய பகுதிக்குள் விற்பனை செய்யப்படுமாயின், அதனைத் தாம் கொள்வனவுசெய்யக் காத்திருப்பதாவும் தெரிவித்துள்ளார். (13)

# கோவில்வயல் சி.சி.த.க. பாடசாலையில் அடிப்படை வசதியின்றி மாணவர்கள் அவதி

(யாழ்ப்பாணம்)

பளை கோவில்வயல் சி.சி.த.க. பாடசாலை, மீண்டும் சொந்த இடத்தில் இயங்கி வருகின்றபோதும், எதுவித அடிப்படை வசதிகளும் இன்றி சிரமங்களை எதிர்நோக்குகின்றது.

மேற்படி பாடசாலை - 1990 ஆம் ஆண்டில் இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்தது. மீண்டும் இந்தவருட முற்பகுதியில், தனது சொந்த இடத்திற்குத் திரும்பி, 160 மாணவர்களுடன் இயங்கி வருகின்றது.

தற்போது, இப்பாடசாலை அடிப்படை வசதிகள் அற்றநிலையிலேயே இயங்கி வருவதாகப் பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

இந்தப் பாடசாலையில் 10 ஆசிரியர்கள் தேவையானபோதும், 5 ஆசிரியர்களே கடமையில் உள்ளனர். நிரந்தர கட்டட வசதிகள் எதுவுமில்லாத நிலைமை காணப்படுகின்றது. குடிநீர் வசதிகளும் செய்து கொடுக்கப்படாத நிலையே காணப்படுகிறது.

தற்காலிகக் கொட்டகையில் தற்போது இயங்கிவரும் இப்பாடசாலை - ஒரு காலத்தில் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாக விளங்கியமை குறிப்பிடத்தக்கது.(09)

# அடையாள அட்டை இல்லாததால் பிதிர்க்கடன் நிறைவேற்ற முடியாத மகன்!

(யாழ்ப்பாணம்)

மரணமான தந்தையின் 31 ஆம் தின பிதிர்க்கடன்களை - கீரிமலை கடற்கரையில் நிறைவேற்றச் சென்ற மகனும், கிரியைகளை மேற்கொள்ளச் சென்ற குருக்கள் ஒருவரும் தெல்லிப்பளை சோதனை சாவடியில் வைத்து - சீருடையினரால் திருப்பி அனுப்பப்பட்ட சம்பவம், கடந்த வாரம் இடம்பெற்றுள்ளது.

குருக்களும், இறந்தவரின் மகனும் கடமைகளைச் செய்வதற்காக, பண்பாட்டு உடையான வேட்டி, சால்வையுடன் சென்றதால், அடையாள அட்டைகளை எடுத்துச்செல்லவில்லை. உயர்பாதுகாப்பு வலயப் பகுதியில் அடையாள அட்டை இன்றிச் செல்ல முடியாது எனக் கூறியே இவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர். அவர்களுடன் சென்ற ஏனையோர் கடற்கரைக்குச் சென்று, வழிபாடு செய்துவிட்டு திரும்பியதாகப் பாதிக்கப்பட்டோர் தெரிவித்தனர். (111)


வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

முதலாவது அகவையில்



பெயர் : கமலன் அஜந்தன்
முகவரி : தம்பசிட்டி, பருத்தித்துறை.

இரண்டாவது அகவையில்

பெயர் : ச.தமிழினி
முகவரி : கோட்டைக்காடு மல்லாகம்.



ஒன்பதாவது அகவையில்



பெயர் : ச.சக்திதர்ஷினி
முகவரி : அம்பலவாணர் வீதி, உடுவில்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர்:------------------------------------------
முகவரி :------------------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
--------------------
பெற்றார் ஒப்பம்

# வார்த்தை விளையாட்டு


கீழே தரப்பட்டுள்ள கட்டங்களை - விளக்கங்களை வாசிப்பதன்மூலம் நிரப்பவும்.

**மேலிருந்து கீழ்**

1. தோண்டுதல் என்று சொல்லலாம்.
3. வறண்டுபோய் இறுகிக் கெட்டியாக இருக்கும் நிலப்பகுதி.
5. கால் நடையாகப் பயணஞ் செய்பவன்.


**இடமிருந்து வலம்**

2. சிரிக்க வைத்திடும் கோமாளித்தனமான செயல்கள்.
3. சுவடு என்றும் சொல்லலாம்.
6. மூளையில் இருந்து உடலில் பல பாகங்களுக்கும் உணர்வுகளைக் கொண்டு செல்கின்ற, முதுகெலும் பினுள் அமைந்து இருக்கும் நரம்புத்தொகுதி.




# என்னால் உலகம் மகிழும்

என்னைப் பார்த்தால் எறும்பாய்த் தெரிகிறதா?
இமய மலையில் ஏற போகிறேன்!
என்னைப் பார்த்தால் கடுகாய்த் தெரிகிறதா?
என்னால் விமானம் பறக்கப்போகிறது!
என்னைப் பார்த்தால் துரும்பாய்த் தெரிகிறதா?
எல்லாக் கடலையும் அளக்கப் போகிறேன்!
என்னைப் பார்த்தால் புல்போல் தெரிகிறதா?
என்னால் தோன்றும் பெரிய ஆலமரம்!
என்னைப் பார்த்தால் சிறிபாய் இருக்கிறதா?
எட்டிப் பிடித்தால் என்கையில் வானம்!
என்னைப் பார்த்தால் சுலபமாய் இருக்கிறதா?
இவ்வையப் புவவையும் "உடக்கில் காட்டுவேன்!
என்னைப் பார்த்தால் கஷ்டமாய் இருக்கிறதா?
என்னைப் பார்த்தால் மகிழ்ச்சி கொள்ளுங்கள்!
என்றும் தேனாய் இருக்கப் போகிறேனே!
என்னைப் பார்த்தால் வாழ்த்துக் கூறுங்கள்
என்னால் உலகம் மகிழப்போகிறது.



# தகவல் களஞ்சியம்



## உங்கள் நுண்ணறிவை நீங்களே மதிப்பிடுங்கள்


சென்ற வார வினாவிற்கான விடைகள்.

1. (1) KTQ
   (2) KMSTQ

2. (1) நரளை அன்பாகக் கதைப்போம்.
   (2) வருக வருக நேரத்திற்கு வருக.

## முயற்சியுங்கள்! முயற்சியுங்கள்! முயற்சித்துக்கொண்டேயிருங்கள்!

கீழே தரப்பட்டிருப்பது ஒரு நிலப்பரப்பு என்று வைத்துக் கொள் ளுங்கள். இதனை மூன்று நேர்கோடுகள் வரைவதன்மூலம், நான்கு துண்டுகளாகப் பிரியுங்கள். ஒவ்வொரு துண்டிலும் உள்ள எண்களைக் கூட்டினால், கூட்டுத்தொகை இருபத்தைந்து வரவேண்டும்.




விடை அடுத்த வாரம்

கி.சாரதகலா
கணித ஆசிரியர்
கண்டாவளை ம.வித்தியாலயம்


# விளையாட்டு

எத்தனை பேர் வேண்டுமானாலும் விளையாடலாம். நடுவர் சொல்லும் குறிப்புச்கு வேகமாக பதில் சொல்பவர் வெற்றி பெற்றவர் ஆவார். "ம" என்ற பெயரில் தொடங்கும் "ஊர்கள்" என்றால் மன்னார் என்றோ மயிலிட்டி என்றோ அல்லது வேறு ஊர்களின் பெயரை யார் முதலில் சொல்கின்றார்களோ, அவரே வெற்றி பெற்றவர். அதேபோல் அடுத்த குறிப்பு 'ம' என்ற பெயரில் ஆரம்பிக்கும் 'மலர்' என்று இருக்கலாம். மொத்தக் குறிப்புக்களில் யார் அதிக வேகமாகச் சொல் கின்றார்களோ அவர்களே போட்டியில் வென்றவர்.

இங்கே மடிக்கவும்



# வீரம் — அறிவு = ?




(தொடரும்....)



# சிறுவர் அரங்கம்

## நாடுகளைத் தெரிந்துகொள்வோம்

## கனடா

வாரம் தோறும் அறிந்துகொள்ளும் நாடுகளின் வரிசையில் இந்த வாரம் இடம்பிடிக்கிறது கனடா.

| | |
|---|---|
| தலைநகரம் | - ஒட்டாவா. |
| பரப்பளவு | - 99,76 ஆயிரம் ச.கி.மீ. |
| மொழி | - ஆங்கிலம், பிரெஞ்சு. |
| சமயம் | - கிறிஸ்தவம். |
| நாணயம் | - கனடியன் டொலர். |
| சராசரி ஆயுள் | - 79.1 |
| | - ஆண் 76.2 |
| | - பெண் 81.9 |
| முக்கிய நகரங்கள் | - ஒட்டாவா, வான்கூவர், ரொரண்டோ, மொண்ட்ரியல் |




இந்த நாடு உலகின் பரப்பளவில் இரண் டாவது பெரிய நாடாகும். 1982 ஆம் ஆண்டு வரையிலேயே பிரிட்டன், அரசியல் பூர்வமாக ஆட்சியைக் கனடாவிற்கு விட்டுக் கொடுத்தது.

பிரிட்டிஷ் மகாராணியே நாட்டின் தலைவராகச் செயற்படுகின்றார். அடிப்படையில் இது ஒரு விவசாய நாடாகும்.

தொழில்துறையில் பெரும் வளர்ச்சி கண்டுள்ளது. உலகில் மோட்டார் பாகங்கள் ஏற்றுமதியில் முதலிடத்தில் உள்ளது. அத்துடன் அஸ்பெஸ்டஸ், வெள்ளி, நிக்கல், துத்தநாகம் உற்பத்தியில் உலகிலேயே முன்னணி வகிக்கும் நாடாகும்.

இறைவி, முக்கிய உற்பத்திகளாக




விவசாயம் - கோதுமை, பார்லி. கால் நடைகள், மீன் உற்பத்தி. மோட்டார் வாகனங்கள், உணவுப் பொருட்கள், மரம், மரக்கூழ், காகிதம், கனிமம் - பெற்றோலியம், தங்கம், செம்பு, நிலக்கரி ஆகியன உற்பத்தி செய்யப்படுகின்றன.

# இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :-
இ.இராஜப்பிரவிந்தன்
கற்கும் பாடசாலை :-
மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலயம்.
கற்கும் தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகைவாசித்தல்.



முழுப்பெயர் :- க. ரேணுகா
கற்கும் பாடசாலை :-
நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்.
கற்கும் தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :-
வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல்.

முழுப்பெயர் :- ஜெ.சமிலா துஷ்யந்தி
கற்கும் பாடசாலை :-
திருக்குடும்பக் கன்னியர் மடம்
கற்கும் தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டு, நடனம், தொலைக்காட்சி பார்த்தல்.

முழுப்பெயர் :- தி.அஜந்தா
கற்கும் பாடசாலை :-
வட இந்து மகளிர் கல்லூரி
கற்கும் தரம் :- 4
ஆர்வமுள்ள துறைகள் :-
முத்திரை சேகரித்தல்.

முழுப்பெயர்:- ஜெ.ஜெனனி
கற்கும் பாடசாலை :-
நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்
கற்கும் தரம் :- 2
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், விளையாட்டு.

முழுப்பெயர்:- இ.வெங்கடரமணா
கற்கும் பாடசாலை :-
தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், கிரிக்கெட்.

முழுப்பெயர்:- வ.டயாஜினி
கற்கும் பாடசாலை :-
கனகபுரம் மகா வித்தியாலயம்
கற்கும் தரம் : 2
ஆர்வமுள்ள துறைகள் :-
தொலைக்காட்சி பார்த்தல், பத்திரிகை வாசித்தல்.

# இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

# இளந்தேனீக்கள் கழகம்
## விண்ணப்பம்

முழுப் பெயர் :........................................
கற்கும் பாடசாலை :........................................
கற்கும் தரம் :........................................
வீட்டு முகவரி :........................................
பிறந்த திகதி :........................................
ஆர்வமுள்ள துறைகள் :........................................

........................ ........................
திகதி ஒப்பம்

........................ ........................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

# உங்களுக்குத் தெரியுமா?

1. மிகநீண்டசாலைக் குகைப்பாதை - சென் கொட்டர்த் குகைப் பாதை - சுவிட்சர்லாந்து - நீளம் 16.32 கி.மீ.
2. கடலுக்கடியில் மிக நீண்ட குகைப்பாதை - சனல் குகைப்பாதை. பிரிட்டனின் கென்டிலிருந்து பிரான்சின் கலாய்ஸ் வரை ஆங்கிலக் கால்வாயின் அடியில் கட்டப்பட்டுள்ள இக்குகைப்பாதை, 49.94 கி.மீ நீளமானது.
3. மிக நீண்ட பாலம் - செகன்ட் லேக் ஸ்டார்ட்ரியன் கோஸ்வே, அமெரிக்காவிலுள்ள லூசியானா என்னும் இடத்தில் உள்ளது. அதன் நீளம் 34.42 கி.மீ.

இங்கே மடிக்கவும்



# கொக்கிடம் பாடம் கற்ற நரி

ஒரு காட்டில் கொக்கும் நரியும் நண்பர்களாகப் பல நாட்கள் பழகி வந்தன. நரிக்குக் கொக்கின் நீண்ட அலகைப் பார்த்துப் பொறாமை வந்தது. அடிக்கடி கொக்கின் மூக்கைக் கேலி செய்து சிரித்தது. ஒரு நாள் கொக்கை, ஒரு விருந்துக்கு அழைத்தது நரி.



விருந்துக்குப்போன கொக்கு, எதையும் சாப்பிட முடியாதபடி எல்லா உணவு வகைகளையும் தட்டிலேயே பரிமாறி வைத்திருந்தது நரி. கொக்கால் எதையும் சாப்பிடமுடியவில்லை, குடிக்கவும் முடியவில்லை. அதற்கு அவமானமாய்ப் போய்விட்டது. கொக்கு அமைதியாய் அமர்ந்திருப்பதைப் பார்த்த நரி - 'என் வாயைப்போல உனக்கு இருந்திருந்தால் இவற்றையெல்லாம் சாப்பிட்டிருப்பாய். எவ்வளவு ருசியான உணவு.... அடடா! பிரமாதம்! என்று சொல்லி மேலும் வெறுப்பேற்றியது. கொக்கு துக்கத்துடன் தன் இருப்பிடத்திற்கு வந்தது.

எப்படியாவது, நரிக்கு ஒரு பாடம் கற்பிக்கவேண்டும் என்று மனத்திற்குள் திட்டம் தீட்டியது. சில நாட்கள் கழித்து, 'நரியாரே! உங்களுக்கு நான் விருந்து வைக்க வேண்டும். என் வீட்டுக்கு வாருங்கள்' என்று அன்போடு அழைத்தது. நரியும் ஆசையோடு கொக்கின் இருப்பிடத்திற்குச் சென்றது.


கொக்கு விதம்விதமாகச் சூப் தயாரித்து, எல்லாவற்றையும் நீண்ட கழுத்துடைய ஜாடியில் வைத்திருந்தது. நரி சாப்பிட அமர்ந்ததும் சூப் நிறைந்த ஜாடிகளை வரிசையாகக் கொண்டுவந்து வைத்தது.

நரியால் ஜாடிக்குள் இருந்த சூப்பைக் குடிக்கமுடியவில்லை. கொக்கு- தன்னுடைய நீண்ட அலகை லாவகமாக ஜாடிக்குள் விட்டு, சூப்பை உறிஞ்சிக் குடித்தது. 'ஆகா! என்ன அருமையான சுவை!' என்று சுவைத்துக் குடித்த கொக்கைப் பார்த்த நரிக்கு வாயில் எச்சில் ஊறியது!

'நரியாரே! ஏன் ஒன்றையும் குடிக்கவில்லை? என்னுடைய வாய்போல உங்களுக்கு இருந்திருந்தால், இப்படி ஆகியிருக்குமா? ஒரு அருமையான விருந்தை அனுபவிக்கக் கொடுத்து வைக்கவில்லை, என்று வெறுப்பேற்றியது.

நரிக்கு அப்போதுதான் உறைத்தது. 'கொக்கை எத்தனை தடவை அவமானப்படுத்தி, கேலி செய்திருக்கின்றோம்' என்று உணர்ந்தது.

# உங்கள் கைவண்ணம்



சி.மேரி ஜீவனா



சௌஜன்யன்
தரம் - 7
சென.ஜோன்ஸ் கல்லூரி

# விடுகதைகளும் விடைகளும்

1. காதில்லாமல் கேட்பேன்,
வாயில்லாமல் பேசுவேன்,
காற்றில்லாமல் பிறப்பேன்.
நான் யார்?

2. என் அம்மா மேகம், அப்பா காற்று,
என் மகன் ஓர் ஓடை,
வானவில்லே என் படுக்கை.
நான் யார்?

3. சுரங்கத்தில் இருந்து என்னை எடுத்தார்,
மரப்பெட்டிக்குள்ளே போட்டு அடைத்தார்,
வெளியில் எங்கும் விடுவிக்காமல்,
கடைசி வரைக்கும் உபயோகித்தார்.
நானென்ன?

4. மண்ணின் மீது நடப்பேன்,
சத்தம் போட்டுச் சிரிப்பேன்,
சங்கீதமாய் இசைப்பேன்.
நான் யார்?

5. விரலாலே பிறப்பேன்,
வீதியிலே சிரிப்பேன்,
புள்ளியாகத் தொடங்கி,
பூக்களாக மாறுவேன்.
நான் யார்?

6. செடிகளின் சிரிப்பு நான்,
சூந்தலின் நகையும் நான்,
நாசிக்கு நண்பனாவேன்.
நான் யார்?

1. எதிரொலி
2. மழை.
3. பென்சிலில் உள்ள கரிப்பகுதி.
4. அருவி.
5. கோலம்.
6. பூக்கள்.

# பாரமானி (Barometer)

காற்றின் அழுக்கத்தை அளக்க உதவும் கருவி பாரமானி ஆகும். ஒரு பக்கம் மூடிய கண்ணாடிக் குழாயில் பாதரசத்தை நிரப்பி, அதை பாதரசம் நிரம்பி உள்ள கிண்ணத்தில் தலை கீழாகக் கவிழ்த்தால், அக்குழாயில் பாதரசத்தில் உயரம் சிறிதளவு குறைந்த பிறகு, அப்படியே நிலையாக நிற்கும். வெளிக்காற்றின் அழுத்தமே அக்குழாயில் நிற்கும் பாதரசத்தை கீழே விழாமல் தாங்குகின்றது. இந்த உயரமானது காலநிலைக்கும், ஓரிடத்தின் உயரத்திற்கும் ஏற்ப மாறுபடும். இதை ரொரி செல்லி (Torri Celli) என் னும் இத்தாலிய விஞ்ஞானி கண்டுபிடித்தார். எங்கும் எடுத்துச் செல்லகூடிய திரவமில்லாத பாரமானிக்கு- வுனிராய்டு பாரமானி என்ற பெயர். இதில் காற்றின் அழுத்த மாற்றத்திற்கு ஏற்ப நகரக்கூடிய முள் ஒன்று உண்டு. முள்ளின் நுனியில் ஒரு நீண்ட பேனாவை இணைத்து, அது உருளையில் ஒட்டப் பட்டுள்ளவரை, படத்தாளைத் தொட்டுக் கொண்டிருக் கும் படி செய்வார்கள். இந்தப் போனை அத்தாளில் கோடுகள் வரைந்து பதிவு செய்யும். இக்கருவிக்குப் பாரரேகை என்று பெயர். உயரமானி (Barograph) என்னும் ஒருவகை அனிராய்டு பாரமானியை விமா னிகள் பயன்படுத்துகின்றனர்.

சி.அசோக்கமாலா

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*சிறுகாப்பின் பேரிடத்தது ஆகி உறுபகை*
*ஊக்கம் அளிப்பது அரண்*

-திருக்குறள்.

## நமது நோக்கு

# மக்களின் உரிமையை மறுக்கும் இராணுவ நிலைப்பாடு

உயர்பாதுகாப்பு வலயங்கள் என்று படைத்தரப்பினரால் வர்ணிக்கப்படும் அவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழ்மக்களின் பாரம்பரிய வாழ்விடப் பிரதேசங்களில் இருந்து- அதனை ஆக்கிரமித்து அழித்து அங்கே அரனும் அமைத்து நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினர் அங்கிருந்து அகன்று மக்களின் இயல்புவாழ்வை அவர்கள் ஆரம்பிக்க விடுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை மீண்டும் நிராகரித்துள்ளார்கள்.

நேரடியாக நிராகரிக்காவிட்டாலும்கூட, அத்தகைய நியாயபூர்வமான உரிமைபூர்வமான கோரிக்கைக்கு அவர்கள் கடுமையான எதிர்ப்பினை வெளியிட்டதன் மூலம் தமிழ்மக்களின் அடிப்படை வாழ்வியல் உரிமைகளை, அபிலாஷைகளைப் புறந்தள்ளிவிட்டு- இராணுவ நலன்களுக்கு முக்கியத்துவம் வழங்கியுள்ளனர் என்றே கூறவேண்டும்.

உயர்பாதுகாப்பு வலயங்களில் இருந்து இராணுவம் வெளியேறவேண்டும் என விடுக்கப்படும் கோரிக்கைகள் யாவும் இராணுவதரப்பினால் இராணுவ நலன்களின நோக்கிலும், இராணுவ அபிலாஷைகளின் அடிப்படையிலுமே அணுகப்படுகின்றன,

இந்தக் கோரிக்கைகள் மக்களின் உரிமை சார்ந்ததென்றும், மக்களின் தேவைகளின் அடிப்படையில் அது பரிசீலிக்கப்படவேண்டுமென்றும், இராணுவத் தரப்பு ஒருபோதுமே கருதியதில்லை.

இராணுவ மூலோபாயங்களுக்கு ஏற்ப மக்களின் உரிமைகள் அணுகப்படுவது, ஜனநாயகத்திற்கு முரணானது.

அப்பட்டமான சர்வாதிகாரத்தின் வெளிப்பாடென்றே அதைக்கூறமுடியும்.

பல்லாயிரக்கணக்கான மக்களின் உயர்பாதுகாப்பு நிலையங்களாக விளங்கவேண்டி அவர்களின் வாழ்விடப் பிரதேசங்களை, சில ஆயிரக்கணக்கான இராணுவத்தினரின், முகாம்களை தரிப்பிடமாக மாற்றி, அதனை உயர்பாதுகாப்பு வலயமாக பிரகடனம் செய்வது ஒரு போர்ச்சூழலில்கூட ஆபத்தான செயலாகவே அப்போதும்கூட அது ஓர் அதிகாரவெறியுடன் கூடிய அத்துமீறிய ஆக்கிரமிப்பு செயற்பாடாகவே இருக்கும்.

அச்சமயங்களின் இராணுவத்தின் அதிகாரம் கட்டுக்கடங்காததாக இருக்கும். மக்கள் உயிராபத்துக்கும், அச்சுறுத்தலுக்கும் மத்தியில் படையினரின் கெடுபிடிகளுக்கு பயந்து ஒடுங்கிவாழும் நிலையில், அவர்கள் பாதுகாப்பையும், அமைதியையும் தேடி இடம்பெயர்வதும், புலம்பெயர்வதும் இயல்பே.

வெற்றிடங்களை இராணுவம் முற்றுகையிட்டு நிலைகொள்வதும் தனது வசதிக்கேற்ப மக்களின் வதிவிடங்களை சிதைத்தும், மாற்றியும் கொள்வதும் இராணுவ சுபாவமே.

ஆனால், சமாதான சூழலில் போர்நிறுத்தம் ஏற்பட்டுள்ள நிலையில், அரசே மக்களை மீளக்குடியேறவும், புனர்வாழ்வை மேற்கொள்ள அவசியமான புனரமைப்பு செயற்பாடுகளை ஊக்குவிக்கவும், சர்வதேச சமூகத்தின் அனுசரணை மற்றும் நிதியுதவியுடன் முனைப்பாக நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதாக விளம்பரங்களையும், பிரசாரங்களையும் பெருமெடுப்பில் செய்துவரும் கட்டத்தில், இராணுவம் உயர்பாதுகாப்பு வலயங்களிலிருந்து வெளியேறி மக்கள் தமது உரிமையான நிலங்களில் குடியேற எதிர்ப்புக்காட்டி வருவது தான் கவலைக்குரிய விடயம்.

அரசால் இராணுவத்தை கட்டுப்படுத்த முடியவில்லையா? அல்லது இராணுவம் அரசின் கட்டுப்பாட்டுக்குள் இயங்கும் அமைப்பாக இயங்கவில்லையா?

ஜனாதிபதி ஒரு போக்கில், பிரதமர் தலைமையிலான அரசு இன்னொரு போக்கில், நாற்படைகளும் தனித்தனி நாலுபோக்கில் என ஒழுங்கற்று ஒருமைத்தன்மையற்று இயங்கும் சிறிலங்காவில் சமாதான முயற்சிகள் எவ்வாறு முன்னேற்றகராமன கட்டங்களை எட்டமுடியும்?


மக்களின் உரிமையை இராணுவம் நிராகரிக்கும் வேளையில், அரசு சமாதானத்தைப் பற்றி பெரிதாக பீற்றித்திரிவது கேலிக்கிடமான விடயமாகும்.

இராணுவ நலன்களுக்காக, மக்களின் நலன்களுக்கு கொடுக்கும் முக்கியத்தைப் புறக்கணித்துவிட்டு; முன்னுரிமை கொடுப்பதுடன், இராணுவத்தினரின் மனித உரிமை மீறல்களுக்கும், ஜனநாயக எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கும் மௌன அங்கீகாரம் வழங்கி, கண்டும் காணாமல் இருக்கும் அரசால் சமாதான சூழலை தக்கவைத்து, அமைதித்தீர்வை நோக்கி பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கும் திராணியும், ஆத்மசுத்தியும் இருக்குமென எவரும் நம்புதல் சாத்தியமில்லை.

அரசின் கட்டுப்பாட்டின் கீழ் அரசின் செயற்பாடுகளுக்கு ஆதரவாக இயங்கி மக்களின் ஜனநாயக உரிமைகளை அங்கீகரித்து செயற்படும் தன்மை ஒரு நாட்டின் இராணுவத்துக்கு இல்லையெனில் அந்த நாடு எந்த வகையிலும் அபிவிருத்தியடையவோ, அமைதியையும் சமாதானத்தையும் பாதுகாக்கவோ சுயத்துவ ஆற்றல் அற்றதேயாகும்.

சிறிலங்காகவின் இராணுவம் சிறிலங்காவை இத்தகைய பலவீனமான ஒரு நிலையிலேயே நிற்கவைத்துள்ளது.

## நாடும் நடப்பும்




# பிரதமர் பிரச்சனையிலிருந்து விலகுவதாக ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவிப்பு

(கொழும்பு)

பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க, பிரச்சினைகளிலிருந்து தப்பியோட முனைகிறார். அவ்வாறான பதில்களையே ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்தார்.

இவ்வாறு தெரிவித்தார் பொதுஜன ஐக்கியமுன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம. ஜனாதிபதிக்கு - பிரதம மந்திரி அனுப்பிய கடிதம் தொடர்பாக நடாத்தப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டின்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதிக்குப் பிரதம மந்திரி உரிய பதில்களைத் தரவில்லையெனவும், ஜனாதிபதி மீது குற்றஞ்சுமத்தும் வகையிலேயே பிரதமரின் பதில்கள் அமைந்துள்ளதாகவும், ஜனாதிபதி மீது குற்றச்சாட்டுக்கள் தெரிவித்திருப்பதானது, தன்மீதுள்ள குற்றங்களை மறைக்கும் செயல் எனவும் சரத் அமுனுகம தெரிவித்தார்.

ஜனாதிபதியின் கேள்விகளுக்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கலந்து உரையாடிய பின்னரே, பிரதமர் பதில் அளித்திருக்கவேண்டும். பிரதமர் அவ்வாறு செய்யவில்லை. விரைவில் இது தொடர்பாகப் பிரதம மந்திரிக்குக் கடிதமொன்றை ஜனாதிபதி அனுப்புவார் என்றும் சரத் அமுனுகம மேலும் தெரிவித்தார்.

## மன்னார் - முருங்கனில்

# இலங்கை வங்கிக்கிளை திறக்குமாறு வேண்டுகோள்

(மன்னார்)

மன்னார் - முருங்கனில் இலங்கை வங்கிக் கிளையொன்றை நிறுவுமாறு, மன்னார் மாவட்ட அரச அதிபர் - இலங்கை வங்கியின் வடபிராந்திய முகாமையாளரைக் கேட்டுள்ளார்.

மடு, முசலி, நானாட்டான் ஆகிய 3. பிரதேசசெயலர் பிரிவுகளைச் சேர்ந்த 75 கிராமங்களின் நடுவே முருங்கன் உள்ளது. இங்கு 25 பெரிய பாடசாலைகள், 10 அரச அலுவலகங்கள், 2 ப.நோ.கூ சங்கங்கள், 200 தனியார் வர்த்தக நிறுவனங்கள் என்பவற்றுடன், 7948 குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் உள்ளனர்.

ஆனால், இவர்கள் அனைவரும் நாளாந்தப் பணப்பரிமாற்றம் மற்றும் வர்த்தக தேவைக்கான பணப்பரிமாற்றம் போன்றவற்றுக்கு, 60 கி.மீ தூரத்திலுள்ள மன்னார் நகரத்துக்கே வரவேண்டியுள்ளது. இதனால், இவர்களது நேரம் வீணாவதுடன், தேவையற்ற போக்குவரத்து செலவுகளும் ஏற்படுகின்றன.

எனவே, இவற்றைக் கருத்திற்கொண்டு முருங்கன் பகுதியில் இலங்கை வங்கிக்கிளை ஒன்றைத் திறக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என அவர் கேட்டுள்ளார். (201)

# தமிழீழ காவல்துறையினர் தரை வழியாக வன்னிக்கு

(மட்டக்களப்பு)

திலீபன் நினைவுதினத்தில் பங்குகொள்வதற்காக, மட்டக்களப்பிலிருந்து தமிழீழ காவல்துறை உறுப்பினர்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினூடாக வன்னிக்குச் சென்றுள்ளனர்.

கரடியனாறு - கறுத்தப் பாலத்தினூடாக 11 தமிழீழ காவல்துறை உறுப்பினர்கள் இவ்வாறு வன்னிப்பகுதிக்குச் சென்றுள்ளனர்.

இவர்களில் 6 பேர் ஆண் காவல்துறையினர், 5 பேர் பெண் காவல்துறையினர்.

கறுத்தப் பாலத்தருகே இராணுவத்தினருடனும்; போர் நிறுத்த கண்காணிப்புக் குழுனவினர் வழித்துணை வழங்கினர்.

## கட்டாரில் மரணமானதாக கூறப்படும்

# குடும்பஸ்தரின் நிலையைக் கண்டறிவதற்காக மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

கட்டாரில் பலியானதாகக் கூறப்படும் இளம் குடும்பஸ்தரின் நிலை குறித்து, அறிந்துகொள்ள உதவுமாறு அவரது மனைவி - மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உதவியை நாடியுள்ளார்.

கட்டாரிலுள்ள மீன்பிடித்துறை சம்பந்தப்பட்ட நிறுவனமொன்றில், பணியாற்றிய நாவந்துறையை சேர்ந்த அந்தோனிப்பிள்ளை அன்ரனி (வயது 31) என்பவரே உயிரிழந்தாகக் கூறப்படுகிறது. இவர் நான்கு பிள்ளைகளின் தந்தையாவார்.

இரு வருடங்களுக்கு முன்னர் கட்டாருக்கு வேலை தேடிச் சென்ற இந்த நபர், அங்குள்ள மீன்பிடி கம்பனி ஒன்றில் வேலை செய்து வந்தார். வேலைத்தளத்தில் ஏற்பட்ட விபத்துக் காரணமாக இவர் பலியானதாகத் தெரிவிக்கப்படுகிறது. இத்த கவலை கடந்த மாதம் 4 ஆம் திகதி சகதொழிலாளி ஒருவரே யாழ்ப்பாணத்திலுள்ள பலியானவரின் உறவினர்களுக்குத் தெரியப்படுத்தினார்.

அதன்பின்னர் உரிய நிறுவனத்துடனும், கொழும்பில் உள்ள வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்துடனும் - உறவினர்கள் தொடர்புகொண்டபோதும், உரிய தகவலைப் பெறமுடியவில்லை. இதனால், உண்மைநிலையை அறிந்து கொள்ளவோ, உயிரிழந்திருந்தால் அவரது சடலத்தைப் பெறவோ முடியாதநிலை இருப்பதாக உறவினர்கள் கவலை தெரிவித்தனர்.

சட்டரீதியான முறையில் தன்னை காப்புறுதி செய்த பின்னரே, இந்த நபர் வெளிநாடு சென்றுள்ளார். அவரது இழப்பிற்கு, இழப்பீட்டுத் தெகையைப் பெறக்கூடியதாக இருந்தும், அதனையும் பெறமுடியாதநிலையில் குடும்பத்தவர்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அவர்கள் உரியவர்களுடன் தொடர்புகொண்டு, தகவலைப் பெற்றுத்தருவதாக உறுதியளித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# 4 அமைச்சுக்களை கேட்டதாலேயே பொ.ஐ.மு - ஜே.வி.பி. பேச்சு முறிவு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும், ஜே.வி.பினருக்கும் இடையேயான கூட்டமைப்பு முறிவடைந்தமைக்கு, ஜே.வி.பி முன்வைத்த நிறைவேற்றமுடியாத கோரிக்கைகளே காரணம் என, பொதுஜன ஐக்கிய முன்னணி வட்டாரங்கள் தெரிவித்தன.

பொதுஜன ஐக்கிய முன்னணியிடம் - ஜே.வி.பி. நான்கு அமைச்சுப் பொறுப்புக்களைக் கேட்டிருந்தது. அவற்றை வழங்குவதற்குப் பொதுஜன ஐக்கிய முன்னணி மறுப்புத் தெரிவித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

உயர்கல்வி அமைச்சு, கலாசார அமைச்சு, விவசாய அமைச்சு, கடற்தொழில் அமைச்சு ஆகிய நான்கு அமைச்சுக்களுடன் பிரதிப் பாதுகாப்பு அமைச்சையும் தங்களிடம் ஒப்படைக்கவேண்டும் என ஜே.வி.பியினர் கேட்டிருந்தனர்.

இதேசமயம் பிரபல்யமானவர்களின் கொலைகள், 1989 ஆம் ஆண்டுகளில் ஜே.வி.பியினரால் நடத்தப்பட்டன. அவ்வாறான கொலைகளில் ஒன்றாக, ஜனாதிபதியின் கணவரின் கொலையும் அடங்கியது குறிப்பிடத்தக்கது.

# சுதந்திரக்கட்சி – ஜே.வி.பி. கூட்டணி; மீண்டும் பேச்சுக்கள் நடத்தப்படுமா?



சமாதான முயற்சிகளை முன்னெடுத்துள்ள தற்போதைய ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தைக் கவிழ்ககும் நோக்குடன், ஜனதா விமுக்தி பெரமுனவும் (ஜே.வி. பி.), சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் அமைக்க முனைந்த கூட்டு, தோல்வியில் முடிந்துள்ளது.

ஆறு மாதங்களுக்கு மேலாக முன்னெடுக்கப்பட்டு, பெரும் பரபரப்பையும் ஏற்படுத்தியிருந்த இந்தக் கூட்டுமுயற்சியின் தோல்வி, தமது அரசாங்கத்துக்கு எதிராக அமைக்கப்படக்கூடும் என எதிர்பார்க்கப்பட்ட பலமான ஒரு கூட்டுத் தொடர்பான அச்சங்களை ஐ.தே.முவுக்கு இல்லாமல் செய்துள்ளது.

சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான அனுரா பண்டாரநாயக்க, அலவி மௌலானா, மற்றும் பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் மக்கள் ஐக்கிய முன்னணியின் தினேஷ் குணவர்த்தன போன்றோரின் அயராத தொடர்முயற்சியால், முன்னெடுக்கப்பட்டுவந்த இந்தக் கூட்டுமுயற்சி, இறுதிக்கட்டப் பேச்சுக்களுடன் ஒரு முடிவுக்கு வந்துள்ளது.

இந்தக் கூட்டை அதிகம் விரும்பியிராத சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்கும், பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் சில கட்சிகளுக்கும் இந்தக் கூட்டுமுயற்சியின் தோல்வி, ஒரு இனிப்பான செய்தியாகவே இருந்திருக்கும்.

ஆனாலும், ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சியைக் கலைத்துவிடவேண்டும் என்று கனவு கண்டவர்களுக்கோ, இந்தத் தோல்வி மிகவும் வேதனையளிப்பதாகவே அமைந்துள்ளது. கூட்டை அமைக்கும் முயற்சிகள் மீண்டும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று சிஹல உறுமய தற்போது கோரிக்கை விடுத்திருக்கிறது.

இந்நிலையில், சு.கவுக்கும், ஜே.வி.பிக்கும் இடையிலான கூட்டுமுயற்சி மீண்டும் ஏற்படும் சாத்தியம் உள்ளதா என்கிற கேள்வி தற்போது அரசியலரங்கில் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது.

சு.கவுக்கும், ஜே.வி.பிக்கும் இடையிலான கூட்டு முயற்சியின் தோல்விக்குப் பிரதான காரணமாக இருப்பது, நாட்டில் தற்போது நிலவும் இனமுரண்பாட்டுக்குத் தீர்வு காண்பதற்கான வழிமுறைகள் குறித்த உடன்பாடு, இருதரப்புக்குமிடையே எட்டப்படாததேயாகும்.

இன முரண்பாட்டுத் தீர்வுக்கான அணுகுமுறையாக அதிகாரப்பரவலாக்கலை சு.க. முன்வைக்கின்ற போதிலும், ஜே.வி.பி. இதனைக் கடுமையாக எதிர்த்து வருகிறது.

கூடவே, நோர்வே மத்தியஸ்தம் நீக்கப்பட வேண்டும், கண்காணிப்புக்குழு நாட்டைவிட்டு வெளியேற்றப்பட வேண்டும் என்பது போன்ற ஜே.வி.பியின் கடுமையான நிலைப்பாடுகளும், சு.கவினால் ஏற்றுக்கொள்ளக் கூடியவையாக அமையவில்லை.

ஜே.வி.பியுடன் இணைந்து ஒரு அரசாங்கத்தை அமைப்பது தொடர்பாகத் திட்டம் தீட்டி வரும் சுதந்திரக் கட்சியும், அதன் தலைவி ஜனாதிபதி சந்திரிகாவும், அந்த அரசாங்கத்தின் எதிர்காலம் குறித்தும் முன்கூட்டியே சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளனர்.

தற்போது சர்வதேச கவனத்தை ஈர்த்துள்ள இனமுரண்பாட்டுத் தீர்வு தொடர்பாக, சர்வதேசம் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு அணுகுமுறையை முன்வைக்காமல், ஜனாதிபதி சந்திரிகாவினால் ஒரு அரசாங்கத்தை கட்டியெழுப்ப முடியாத சூழ்நிலையே காணப்படுகிறது.

இதனர்த்தம் - அதிகாரப் பரவலாக்கம் என்ற விடயத்தில், ஜனாதிபதி இதய சுத்தியுடன் இருக்கின்றார் எனபதல்ல. அவர் அதிகாரப் பரவலாக்கலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கக் காரணம்- சர்வதேச நிலைமைகளேயாகும்.

ஜே.வி.பியுடன் கூட்டமைக்கப்பட்டு, எதிர்காலத்தில் ஒரு அரசாங்கம் அமைக்கப்படுமானால், அந்த அரசாங்கம் சார்பாக சர்வதேச அளவில் பதில்கூறவேண்டிய கடமைகள் அதிகம் ஜனாதிபதி சந்திரிகாவையே சார்ந்தது.

எனவேதான், அவர் இந்த விடயத்தில் விட்டுக் கொடுக்கமுடியாதவராக உள்ளார்.

மாறாக, ஜே.வி.பியைப் பொறுத்தவரையில், அதனது அடிப்படைப் பலமே அது வெளிப்படுத்தி வரும் இனவாதப் போக்கேயாகும். அதிகாரப் பரவலாக்கத்தை அங்கீகரிப்பது அல்லது ஏற்றுக்கொள்வதென்பது, அதனது இந்தப் போக்குக்கு முரணானதாகவே அமைந்துவிடும். இந்த முரண், தற்போது ஜே.வி.பி. கட்டியெழுப்பி வைத்துள்ள மக்களாதரவையும் பலவீனப்படுத்திவிடும்.

ஜே.வி.பியைப் பொறுத்தவரையில் அதனுடைய ஆதரவு - உணர்ச்சி மயமான இளைஞர்கள் மத்தியிலேயே கட்டியெழுப்பப்பட்டுள்ளது. காலத்துக்குக் காலம் ஆட்சியில் இருக்கும் அரசாங்கங்களையும், அவற்றின் கொள்கைகளையும் எதிர்ப்பதையே கொள்கையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இந்த உணர்ச்சிமயமான இளைஞர் ஆதரவு, மென்மையான போக்கொன்றை ஜே.வி.பி. கடைப்பிடிக்கும் பட்சத்தில், தவிடுபொடியாகி விடும்.

குறிப்பாக, ஈழத் தமிழர் பிரச்சினை தொடர்பில் மிகக் கடுமையான இனவாதக் கொள்கையைக் கடைப்பிடித்து வரும் ஜே.வி.பி, அதன் மூலமும் கணிசமானளவு உணர்ச்சிமயமான மக்களாதரவைப் பெற்றுள்ளது.

கடந்தமாத இறுதியில் அது காலியிலிருந்து கொழும்புவரை நடாத்திய பாதயாத்திரை, அதனது இந்த ஆதரவை ஓரளவு பறைசாற்றுவதாக அமைந்திருந்தது.

தமிழ் மக்களது பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைக்கப்படும் சமஷ்டியானாலும் சரி, இடைக்கால நிர்வாகசபைத் திட்டமானாலும் சரி, எல்லாவற்றையுமே தனிநாட்டை ஊக்குவிக்கும் திட்டம் என்று விசமப் பிரசாரம் செய்வதன்மூலம், சிங்கள மக்களின் உணர்ச்சிகளைக் கிளறிவிட்டு, ஆதரவு தேடிவரும் போக்கையே ஜே.வி.பி. கடைப்பிடிக்கிறது.

பிரேமதாசாவின் ஆட்சிக்காலத்தில்- அரசியல் நீரோட்டத்தில் கலந்துகொண்டபோது, தேர்தலில் ஒரு ஆசனத்தைப் பெறுவதே பெரும்பாடாக இருந்த ஜே.வி.பி, இன்று பதினாறு ஆசனங்களைக் கொண்டிருக்கும் அளவுக்கு வளர்ந்தமைக்கு, அதனது இந்த இனவாத கடும்போக்கே உதவியுள்ளது.

இந்தநிலையில், அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தை ஏற்றுக்கொள்வதென்பது ஜே.வி.பியைப் பொறுத்தவரையில் தற்கொலைக்குச் சமமான முயற்சியாகவே இருக்கும்.

எனவே, அது இப்போது மட்டுமல்ல, எப்போதுமே இத்தகைய ஒரு தீர்வுத்திட்டத்தை ஏற்றுக்கொள்ளும் என்று எதிர்பார்க்கமுடியாது.

மேலும், மிகக் குறுகிய காலத்துள் ஒரு மூன்றாவது சக்தியாக சிறிலங்காவின் அரசியலில் வளர்ச்சி கண்டுள்ள ஜே.வி.பிக்கு, சுதந்திரக் கட்சியுடன் இணைந்து ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்கின்ற அவசியம் எதுவும் கிடையாது.

முன்னரும் சந்திரிகாவின் ஆட்சியில் இத்தகைய முயற்சியொன்றில் ஈடுபட்டிருந்த ஜே.வி.பி, பின்னர் அதிலிருந்து விலகிக்கொண்டதையும் நாம் இங்கு கவனத்தில் கொள்ளவேண்டும்.

இவைதவிரவும், சிறிலங்காவின் அரசியல் வரலாற்றில் இவ்வாறு ஆட்சி பீடம் ஏறும் ஆசையில், மக்கள் மத்தியில் தமது செல்வாக்குக் காரணமாக இருந்த கொள்கைகளைக் (?) கைவிட்டு, சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்ததன்மூலம், தமது அடையாளங்களை முழுமையாக இழந்துள்ள இலங்கையின் இடதுசாரிக் கட்சிகளின் நிலையை ஜே.வி.பி. மறந்துவிடாது.

இன்றும் சு.கவுடன் கூட்டு வைத்துள்ள இந்தக் கட்சிகளில் சிலவற்றுக்கு, நாடாளுமன்றத்தில் ஒரு ஆசனத்தைப் பெறுவதே இயலாத காரியமாகிவிட்டமை வரலாறு.

இந்நிலையில், தமது கட்சியின் செல்வாக்கையும் சு.கவுடனான இத்தகைய நிபந்தனைகளற்ற கூட்டின்மூலம், இழந்து விடுவதற்கு ஜே.வி.பி. தாயராக இருக்காது.

சுதந்திரக் கட்சிக்குத்தான் உண்மையில் இன்று ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு ஜே.வி.பியின் ஆதரவு அவசியமாகியுள்ளது. ஆனாலும், என்ன விலை கொடுத்தும் அதனைச் செய்வது என்கின்ற முடிவுக்கும் சு.க. வந்துவிடமுடியாது.



அத்தகைய ஒரு முடிவு, ஆட்சியமைக்கும் அதனது கனவை நனவாக்க உதவாது என்பதுடன், சு.கவுடன் இணைந்து இடதுசாரிக் கட்சிகள் அழிந்ததுபோல, ஜே.வி.பியுடன் இணைந்து சு.க. அழிந்துவிட்டது என்கின்ற நிலையையும் தோற்றுவித்து விடக்கூடிய அபாயம் உள்ளது.

**அதியமான்**

ஆக, இத்தகைய பின்னணிகளில் நோக்கும்போது, அதிகாரப் பரவலாக்கலை ஏற்றுக்கொள்ளுதல் என்ற முடிவுக்கு ஜே.வி.பி. வருவதென்பதும், அதனைக் கைவிடுவது என்ற முடிவுக்கு சு.க.வருவதென்பதும் தற்போதுள்ள உள்நாட்டு, சர்வதேச அரசியல் நிலவரங்களின் கீழ் சாத்தியமில்லாத விடயங்களாகவே உள்ளன.

இந்நிலையில், ஜே.வி.பி, சு.க. கூட்டென்பதும், இப்போதைக்குச் சாத்தியமற்ற ஒன்றாகவே இருக்கப்போகிறது. ❖

# பிச்சைக்காரர்களின் நலன்களை கவனிக்காது விடுவது முறையா?



செய்திக் கட்டுரை

யுத்தம் மறைந்து சமாதானம் நிறைந்து காணப்படுகின்ற யாழ். குடாநாட்டில் - இன்றும் யுத்தத்தின் எச்சங்கள் எஞ்சி நிற்கின்றன. மழை ஓய்ந்தாலும் தூவானம் நில்லாததுபோல், வேட்டொலிகள் தீர்ந்த பின்னும் எம் காதுகளில் வந்து மோதுகிறது, 'அம்மா, ஐயா பிச்சையிடுங்கள்' என்னும் ஒலி.

யுத்தத்தின் கோரத் தாண்டவத்தால் - உறவுகளிழந்து, உறைவிடமிழந்து, உடையிழந்து, இன்று உண்ண உணவின்றித் தவித்தபடி ஒவ்வொரு மனிதர்களிடமும் கையேந்தி நிற்கின்றார்கள் - 'பிச்சைக்காரர்கள்' என்றழைக்கப்படும் அந்தப் பரிதாப உயிர்கள்.

இன்று வடக்கு - கிழக்கில், அதிலும் குறிப்பாக வவுனியா, யாழ்.குடாநாட்டில்தான் அதிகளவான பிச்சைக்காரர்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். இதில் கவலைக்குரிய விடயம் என்னவென்றால், அதிகம் பிச்சையெடுப்பதில் ஈடுபடுபவர்கள் சிறுவர்களாகவும், பெண்களாகவும் இருப்பது தான்.

அண்மையில் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் நிகழ்ந்த சம்பவம் ஒன்று - நகரில் குறிப்பிடத்தக்க ஒரு நிறுவனமொன்றில் பணிபுரியும் ஒருவர், பொருள்களை வாங்குவதற்காகத் தனது பொக்கற்றிலிருந்து பணத்தை வெளியே எடுத்தார். அதனைத் தூரத்திலிருந்து அவதானித்துக் கொண்டிருந்த பிச்சையெடுக்கும் சிறுவனொருவன், திடீரென அவரது பணத்தைப் பறித்துக்கொண்டு ஓடத் தொடங்கினான். அவரும் சிறுவனைத் துரத்திச்சென்று இரண்டு அடிகொடுத்தார். ஆனால், அடுத்து நடந்த சம்பவம் தான் பிரச்சனைக்குரியதானது.

பிச்சைக்காரச் சிறுவனை அடித்ததைப் பார்த்த, சம்பவ இடத்தில் நின்றிருந்த இருவர், சிறுவனை அடித்த அந்த இளைஞரைத் தாக்கத் தொடங்கினர். இளைஞர் தன்னைப் பற்றி எடுத்துக் கூறியபிறகுதான் அவரைத் தாக்குவதை நிறுத்தினர். பின்னர் இந்த இருவர் சார்பிலும் இளைஞரிடம் மன்னிப்புக் கோரப்பட்டது.

**- சுடர் -**

இவ்வாறான பல பிரச்சனைகள்- தினமும் நடைபெறாவிட்டாலும், நடந்துகொண்டுதான் இருக்கின்றன. ஆனால் சம்பந்தப்பட்ட எவரும் இதற்காகக் கவலைப்படவுமில்லை, நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவுமில்லை.

பிச்சை எடுப்பவர்கள் புதிது புதிதாக இப்பொழுது ஒரு நடைமுறைகளைப் பின்பற்றுகிறார்கள். யாராவது ஒருவர் தன்னைச் சிறிது அலங்கரித்துக்கொண்டு வந்தால், உடனே ஓடிச் சென்று அவரது காலில் விழுந்து, தங்கள் கஷ்டங்களைப பற்றிக் கூறத் தொடங்குகிறார்கள். அவர்களும் பிச்சையிடுகிறார்கள். ஆனால் அவர்கள் பிச்சையிடுவது, அந்தச் சிறுவர்களின் பரிதாபநிலையைப் பார்த்து அல்ல, யாராவது தங்களை மட்டமாக எடைபோட்டு விடுவார்களோ என்ற காரணத்தால்தான்.

யாராவது ஒருவரின் கையைப் பிடித்துக்கொண்டு, அவர் பிச்சையிடும்வரை கையை விடாமல் பிடித்திருப்பது. உடைகளைப் பிடித்துவைத்துக்கொண்டு பிச்சைகேட்பது, பஸ்ஸில் ஏறிநின்று பாட்டுப்பாடுவது, கண்ணீர்விட்டு அழுதபடி பிச்சைகேட்பது போன்றன இன்றைய பிச்சைக்காரர்களின் புதுப்புது உத்திகள்.

குழந்தையுடன் வரும் பெண் பிச்சைகேட்பது, வியப்புக்குரியதொன்று. பஸ்ஸில் ஏறும்வரை அழாமலிருக்கும் குழந்தை, உள்ளே நுழைந்ததும் அழத்தொடங்கிவிடும். பஸ்ஸிலிருந்து இறங்கும்வரை குழந்தையும் அழுகையை நிறுத்துவதில்லை, தாயும் நிறுத்த முயற்சிப்பதில்லை. (அந்தச் சத்தத்திலாவது பிச்சையிடுவார்கள் என்ற நம்பிக்கை அந்தத் தாய்க்கு உண்டு போலும்)

உணவுக்காகப் பிச்சையெடுக்கிறார்கள் என்றாலாவது பரவாயில்லை. திருடுகிறார்கள் அதனிலும் மேலாக விபச்சாரத்திலும் ஈடுபடுகின்றார்கள். இதைத்தான் ஏற்றுக்கொள்ள முடியாமலிருக்கின்றது.இவ்வாறு இந்தப் பிச்சைக்காரர்களால் நாட்டின் ஒழுங்கு குலைகின்றது. அதனிலும் மேலாக கலாசாரம் சீர்கெட்டுப் போகின்றது.

வடக்கு - கிழக்கில், எண்ணுக் கணக்கற்ற அனாதை இல்லங்கள், சிறுவர் பராமரிப்பு நிலையங்கள், சிறுவர் நலன்பேண் நிலையங்கள், பெண்கள் அமைப்புக்கள், முதியோர் பராமரிப்பு நிலையங்கள் என்பன இருக்கின்றன. ஆயினும் இந்த அமைப்புக்கள்கூட இந்தப் பிச்சைக்காரர்கள் மீது, சிறுவர்கள் மீது, பெண்கள் மீது அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை.

முன்புதான், யுத்தம் காரணமாக அதிகளவான சிறுவர்களை ஏற்றுக்கொள்ளத் தயக்கம் காட்டினார்கள். ஆனால், இப்போதும் ஏன் தயங்குகிறார்கள்? பெண்களுக்கு சமவுரிமை வேண்டும், பெண்களை இழிவுபடுததுவதைத் தடுப்போம் என்று அலறும் அமைப்புக்கள், இன்று இந்தப் பிச்சைக்காரப் பெண்கள் தகாத நடவடிக்கையில் ஈடுபடும்போதும், சிறு பெண்கள் பிச்சையெடுக்கும் போதும் ஏன் மௌனமாக இருக்கிறார்கள்?



தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதானச் சூழ்நிலையின் நற்பயனாக, வெளிநாடுகள் பல நிதியுதவிகளை வடக்கு - கிழக்கு புனர்நிர்மாணத்திற்காக வழங்கிவருகின்றார்கள். அந்த உதவிகள் மேற்கூறப்பட்ட அமைப்புகளுக்கும் போய்ச் சேர்கின்றன. பல தனியார் நிறுவனங்கள், தனிநபர்கள்கூட இத்தகைய நிலையங்களுக்கு, மனிதாபிமான அடிப்படையில், பல வழிகளில் உதவி புரிந்து வருகிறார்கள். அவ்வாறான நிலையில்கூட இந்த நிறுவனங்கள் பிச்சைக்காரர்களைக் கவனத்தில் எடுக்காதது கவலையளிக்கிறது.

யாழ்ப்பாணத்தில் அநாதை இல்லங்கள், பராமரிப்பு நிலையங்கள் போன்ற அமைப்புக்களின் நிர்வாகத்தினர் - தோளில் துண்டைப் போட்டபடி, சொகுசுகார்களில் வலம்வந்தபடி, நாம் அநாதை இல்லங்களின் அமைப்

(09 ஆம் பக்கம் பார்க்க)

# திக்ரிட்டில் கெரில்லா தாக்குதல்; அமெரிக்கப் படையினர் மூவர் பலி!

## ஈராக்கில் சதாம் ஆதரவுப் படையினர் தொடர்ந்து கைவரிசை

ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படையினர் மீது அண்மைக்காலமாக தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்களில், நேற்று திக்ரிட் நகரில் சதாமின் படைகள் மறைந்திருந்து தாக்கியதில் மூன்று அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டனர்.

நேற்று முன்தினமும் அமெரிக்கப் படையினரின் ட்ரக் மீது மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலில் 3 பேர் கொல்லப்பட்மை தெரிந்ததே.

இதேவேளை, வரும் செவ்வாய்க்கிழமை ஐ.நா. பாதுகாப்புச் சபையில் ஈராக் தொடர்பாக நடைபெறவுள்ள கலந்துரையாடலுக்கு முன்னர்- ஈராக்கில் போரிடுவதற்கு மேலதிக படையினரை அனுப்புவதற்கும், போருக்காக மேலதிக பணத்தினைப் பெறுவதற்கும் புஷ் அரசு, சட்டமூலம் ஒன்றை அமெரிக்க செனற் சபையில் கொண்டு வந்து சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுவிடலாம் என்று நம்புகிறது.

ஆனாலும், ஈராக்கில் தொடந்து நடைபெறும் சம்பவங்களால், அமெரிக்க அரசு - ஈராக் தொடர்பாக கொண்டுள்ள நிலை தொடர்பாக பலத்த எதிர்ப்புக்களை எதிர்கொள்வதாக, அந்த நாட்டுச் செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, பிரான்ஸும், ஜேர்மனியும் ஈராக்கின் அதிகாரத்தை அமெரிக்கப் கூட்டுப்படையினரின் கையிலிருந்து படிப்படியாக, ஈராக்கியர்களிடமே வழங்குமாறு மீண்டும் வலியுறுத்தியுள்ளன.

# தென்கொரியாவில் அமெரிக்க ஏவுகணைகள்; யுத்த ஆயத்தமென வடகொரியா குற்றச்சாட்டு!



அமெரிக்கா தனது 'பற்றியோற்' ஏவுகணைகளை தென்கொரியாவில் பொருத்திவருவதாக, வடகொரியா குற்றஞ்சாட்டியுள்ளது.

அமெரிக்காவின் இந்தச் செயற்பாட்டை, போரை ஆரம்பிப்பதற்கான முயற்சியாகவே தாம் கருதுவதாக, வடகொரியா விசனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, வடகொரியா ஏவுகணை தயாரிப்பதாக எழுந்துள்ள பிரச்சினைக்கு ஒரு தீர்வு எட்டப்படாத நிலையில், அமெரிக்கா தற்போது மேற்கொண்டுவரும் நடவடிக்கையானது - இந்தப் பிரச்சினையை மேலும் சிக்கலுக்குள் தள்ளிவிடும் என்று கூறப்படுகின்றது.

தென்கொரியாவிலுள்ள அமெரிக்கப் படைத்தளத்தில் ஏற்கனவே இருந்த ஏவுகணையை அகற்றிவிட்டு, நவீனமயப்படுத்தப்பட்ட ஏவுகணை தற்போது பொருத்தப்பட்டுள்ளதாகவும், அதற்குரிய பாகங்களையே தற்போது தென்கொரியாவுக்கு கொண்டு வந்துள்ளதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

கண்டம் விட்டுக் கண்டம் தாக்கும் திறன், வான்வெளித் தாக்கும் திறன், அருகில் உள்ள நாடுகள் மீது தாக்குதல் மேற்கொள்ளும் திறன் என்பவற்றை கொண்டதாக இந்தப் புதிய 'பற்றியோற் ஏவுகணை அமைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

பற்றியோற் ஏவுகணை அமெரிக்காவைத் தவிர இதுவரை ஈராக்கில் மட்டுமே பொருத்தப்பட்டுள்ளது. தற்போது இரண்டாவது நாடாக தென்கொரியாவிலும் பொருத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடகொரியா அணுவாயுதப் பரிசோதனை மேற்கொள்வதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டி வந்ததும்,இது தொடர்பாக அண்மையில் சீனாவில் 5 நாடுகள் ஒன்றுகூடிப் பேச்சுவார்த்தை நடத்திய போதும் முடிவுகள் எதுவும் எட்டப்படாமல் இந்தச் பேச்சுக்கள் நிறைவடைந்தது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவுக்குள் ஊடுருவ முயன்ற 11 தீவிரவாதிகள் சுட்டுக்கொலை!

பாகிஸ்தான் எல்லைப்பகுதியிலிருந் இந்தியக் கட்டுபாட்டிலுள்ள காஷ்மீருக்குள் ஊடுருவ முயன்ற 11 தீவிரவாதிகளை தாம் சுட்டுக்கொன்றதாக, இந்திய இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

மாரிகாலம் ஆரம்பித்தால் இரு நாடுகளுக்குமான எல்லைப் பகுதியிலமைந்த மலைப் பிரதேசம் முழுவதும் பனியால் மூடப்பட்டு விடும். இதனால், தீவிரவாதிகளால் இந்தியாவிற்குள் ஊடுருவமுடியாத நிலை ஏற்படும். எனவேதான், மழை காலத்திற்கு முன்னர் அவர்கள் இந்தியாவுக்குள் ஊடுருவுவதற்கு முயற்சிக்கின்றனர் என்றும், இந்திய இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

தீவிரவாதிகளின் ஊடுருவல் நாளாந்தம் நடைபெற்றுவருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்தத் தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் அரசு உதவுவதாக இந்தியா தெரிவித்த குற்றச்சாட்டினைப பாகிஸ்தான் மறுத்துள்ளது.

## உலக நோக்கு

# ஈராக் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் சரணடைந்ததாக அமெரிக்கா அறிவிப்பு!



ஈராக்கில் சதாமின் ஆட்சிக் காலத்தில் பாதுகாப்பு அமைச்சராக இருந்த ஜெனரல் சுளுத்தான் கசீம் அகமட் அமெரிக்கப் படையினரிடம் சரணடைந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவினால் தேடப்பட்டுவந்த ஈராக்கியர்களின் பட்டியலில் இவர் 27 ஆவது இடத்தில் இருந்தார்.

கடந்த ஒருவார காலமாக நடைபெற்ற சமரசப் பேச்சுக்களை அடுத்து, இவர் நேற்று அமெரிக்கப் படையினரிடம் சரணடைந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

# மத்திய கிழக்கிற்கான சமாதான முயற்சி தோல்வியுற்றதாக அமெரிக்கா அறிவிப்பு!

(வோஷிங்டன்)

இஸ்ரேலுக்கும், பலஸ்தீனத்துக்கும் இடையேயான பிரச்சினைக்குத் தீர்வாக தன்னால் மேற்கொள்ளப்பட்டு வந்த 'வீதி வரைபு' சமாதான முயற்சி தோல்வி அடைந்துவிட்டதாக, அமெரிக்க அதிபர் ஜோரஜ் புஷ் அறிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் முஹமட் அபாஸின் கருத்துக்களை பலஸ்தீன அதிபர் யசீர அரபாத், ஏற்கத் தவறியமையே சமாதான முயற்சிகள் தோல்வியடைந்தமைக்குக் கார்ணமென, புஷ் குற்றஞ்சாட்டினார்.

இதேவேளை, சமாதானம் ஏற்படவேண்டும் என்றால், தீவிரவாதத்தை நூறுவீதம் கட்டுப்படுத்தக்கூடிய தலைவர் ஒருவர் பலஸ்தீன மக்களுக்குத் தேவை என்றும் புஷ் தெரிவித்தார்.

முன்னர் பிரதமராக இருந்த முஹமட் அபாஸ் மீது மிகுந்த மரியாதை வைத்திருந்ததாகவும், ஆனால் அவரை அரபாத் பதவியிலிருந்து பலவந்தமாக அகற்றிவிட்டதாகவும் புஷ் மேலும் தெரிவித்தார்.



# பிச்சைக்காரர்களின் நலன்களை...

பாளர்கள், மேம்பாட்டு நிறுவனங்களின் தலைவர்கள் என்று பந்தா காட்டுகிறார்கள். அவர்கள்

பெரிய மனித தோரணையில் நடமாடுகிறார்களே தவிர, இந்தப் பிச்சைக காரர்களைப் பராமரிக்க, சீர்திருத்த நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. ஆயினும் சில அநாதை இல்ல, சிறுவர் இல்ல அமைப்பாளர்கள் தம்மை வெளிக்காட்டாமல் சிறடிந்த பல நடவடிக்கைகளில் ஈடு பட்டுவருகின்றார்கள். அவர்களாவது இந்தப் பிச்சைக்காரர்கள் மீது கருணைகாட்ட வேண்டும்.

இந்தப் பிச்சைக்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், இன்னும் இவர்கள் வளர்ந்து வருவார்களேயானால்- நாட்டின் ஒழுங்கு தன்மைக்குப் பங்கமும், கலாசாரத்திற்குச் சீரழிவும் ஏற்பட வாய்ப்புண்டு.

பிச்சைக்காரர்கள் அழிக்கப்பட வேண்டியவர்களோ, சிறையில் அடைக்கப்படவேண்டியவர்களோ அல்ல. அவர்களைச் சீர்திருத்தி, சிறுகைத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுத்த முடியும். கையிழந்த, காலிழந்தவர்களுக்குக் கூட எத்தனை எத்தனையோ தொழில்செய்யும் வழிகள் இருக்கின்றன. அவர்களை நல்வழியில் செலுத்தமுடியும்.

இனிமேலாவது - அனைத்து மனிதநேய அமைப்புகளும்- இந்தப் பிச்சைக்காரர்கள் மீது அக்கறைகொண்டு, அவர்களின் பிரச்சனைகளைத் தீர்த்து, அவர்களைச் சிறந்த பாதையில் வழி நடத்துவார்களா? இனிவரும் காலங்களிலாவது பிச்சைக்காரர்களின் தொல்லைகளின்றி மக்கள் வீதிகளிலும், பஸ்களிலும் சுதந்திரமாக நடமாட உதவிபுரிவார்களா?

சிறுவர்களையும், சீர்கெட்டவர்களையும் நல்வழிப்படுத்துவதற்காக இயங்கிவரும் - சமூக அமைப்புகளும், நலன்புரி நிலையங்களும், சிறுவர் பராமரிப்பு இல்லங்களும், அனாதை இல்லங்களும் அவர்கள் மீது இனியாவது அக்கறை எடுத்துக்கொள்ளவேண்டும். அக்கறை காட்டுவார்களா?

'பிறக்கும்போது பிச்சைக்காரர்களாய் எவரும் பிறப்பதுமில்லை. இறக்கும்போது பணக்காரன் எதுவும் கொண்டு செல்வதுமில்லை.



# ஊர்சுற்றி எழுதுவது

என்னிடம் அதிகாரம் இருக்கிறது. பொறுமையின் எல்லைக்கே நான் போய்விட்டேன். எனது அதிகாரத்தைப் பாவிக்கவேண்டிய நேரம் வந்துவிட்டதாகவே கருதுகிறேன்.

இப்படி நிறைவேற்று அதிகாரம் உடைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கடந்த சில காலமாக ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை மிரட்டிக்கொண்டே வந்தார்.

திருகோணமலைத் துறைமுகத்துக்கு அபாயம். இதனால் பலாலி விமானத்தளப் படையினருக்கும் பேராபத்து என்று சந்திரிகா அம்மையாரின் கையாட்களின் மூலமும் மிரட்டல்கள் வெளிவந்தன.

விடுதலைப் புலிகள் போர்நிறுத்த காலத்தில் தங்களைப் பலப்படுத்திக் கொண்டார்கள். திருகோணமலையைச் சுற்றி புதிதாக பதின்மூன்றிலிருந்து இருபத்திரெண்டு வரையிலான முகாம்களை அமைத்திருக்கிறார்கள் என்றும் இவர்கள் கிலியேற்படுத்தினர்.

தங்கள் மிரட்டலுக்கு ஆதாரமாக கடற்படை அதிகாரி ஒருவரைக் கொண்டு ஒரு அறிக்கையையும் தயாரித்து சில பத்திரிகைகளுக்குக் கொடுத்து தமது பிரசாரத்துக்கு வலுச்சேர்த்தனர்.

சந்திரிகா அம்மையார் பொறுமையின் உச்சத்துக்குச் சென்று கடுமையான வார்த்தைகளைக் கொண்ட ஒரு கடிதத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைத்தார்.

சில மாதங்களாக சந்திரிகா அம்மையார் கடிதங்களாகவே எழுதித்தள்ளினார். உள்துறை அமைச்சர், பாதுகாப்புத்துறை அமைச்சர் என்று பல அமைச்சர்களுக்கும் கடிதங்களை எழுதினார். உத்தரவுகள் பிறப்பித்தார். ஐ.நா.விற்கான இலங்கையின் பிரதிநிதி மகேந்திரனுக்கும் கற்பனைக் கடிதம் எழுதினார்.

ஆனால், அவரது கடிதத்துக்கு அவர் சிறிதும் எதிர்பார்க்காத காட்டமான பதில் ஒன்று பிரதமர் ரணிலிடமிருந்து கிடைத்திருக்கிறது. புலி பதுங்கியிருக்கிறது. திருகோணமலை மீதும், பின்னர் பலாலியிலும் அது பாயப்போகிறது என்று பயமுறுத்திக்கொண்டிருக்கிறீர்கள். நாங்கள் புலிகளுக்கு இடம்கொடுத்துக்கொண்டிருப்பதாகக் கூறிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால், உங்கள் ஆட்சியில்தான் வன்னியைப் புலிகளிடம் இழந்தீர்கள். கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தினுள் புலிகள் புகுந்து விமானங்கள் பல அழிக்கப்பட்டதும் உங்கள் ஆட்சியில்தான். என்றுமே வெற்றிகொள்ளமுடியாதிருந்த ஆனையிறவுப் படைத்தளம் வெற்றிகொள்ளப்பட்டதும் உங்கள் ஆட்சியில்தான் என்று பட்டியல் போட்டு ரணில் கடிதம் அனுப்பியிருந்தார்.

இந்தக் கடிதம் பற்றி ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பதில் கடிதத்தில் எந்தவித உண்மையுமில்லை என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எதில் எந்த உண்மையில்லை என்பது இனித்தான் விபரம் தெரியவேண்டும்.

ஆனால், தமிழ்மக்களுக்கு ஒரு உண்மை தெளிவாகத் தெரிகிறது.

தமிழ்மக்களின் போராட்டத்திற்கு எதிராக சந்திரிகா அம்மையாரும் அவரது கையாட்களும் வெளிப்படையாகக் கூச்சல்போடுவதும் சிங்கள, ஆங்கில ஊடகங்கள்மூலம் சிங்கள மக்களைத் தூண்டிவிடுவதும் - ஜே.வி.பி., சிஹல உறுமய போன்ற இனவாதக் கட்சியினரும் பிக்குகள் முன்னணி போன்றவையும் இனவெறியைக் கிளப்புவதும் எல்லோரும் அறிந்ததே.

இந்தியாவை விடுதலைப் புலிகளுக்கு எதிராகத் தூண்டிவிட்டு, இலங்கையின் இனப்பிரச்சினையில் இந்தியாவைச் தலையிடச் செய்வதற்கும் இவர்கள் முயன்றுகொண்டிருக்கின்றனர்.

இந்தக் கூச்சல்கள் இல்லாமலே தமிழ்மக்களின் போராட்டத்துக்கு எதிராக ஐக்கிய தேசிய முன்னணி அரசும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இந்தியாவுடனும் அமெரிக்காவுடனும் இரகசிய ஏற்பாடுகள் (ஒப்பந்தமோ உடன்படிக்கையோ) செய்திருக்கிறார் என்பது அவர் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எழுதிய பதிலில் தெரிகிறது.

அவர்கள் அதிகார ஆட்சிக்காகவும், பதவிக்காகவும் என்னதான் மோதிக்கொண்டாலும் தமிழ்மக்களின் உரிமைகளைப் பறிப்பதிலும் அவர்களின் உரிமைப் போராட்டங்களையும், உரிமைக் குரலையும் நசுக்குவதிலும் அவர்கள் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்கள் அல்லர்.

சீறும் பாம்பைவிட பற்றைக்குள்ளும் சருக்குக்குள்ளும் கிடக்கும் பாம்பு ஆபத்தானது!

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வே உகந்தது என ஐ.தே.கட்சி, பொ.ஐ.முன்னணியும் உணர்ந்துள்ளன!

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அரசியல் ரீதியான தீர்வே உகந்தது என, பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஐக்கிய தேசிய கட்சியும் உணர்ந்துள்ளதாக பிரதமமந்திரி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுக் கண்டியில் கிராமமொன்றிற்குப் புதிய மின்னிணைப்பை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போது பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றும் போது மேலும் தெரிவித்ததாவது,

நாட்டில் நீண்டகாலமாக இடம் பெற்றுவரும் யுத்தத்தினை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்பதில் சர்வதேச நாடுகளும் மக்களும் விருப்பம் கொண்டுள்ளனர்.

இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவந்து நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமானால் அரசியல்ரீதியான தீர்வே அவசியமானது. இதனை பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஐக்கியதேசியக்கட்சியும் உணர்ந்துள்ளன. ஆனால், இந்த இனப்பிரச்சினைக்கு எந்த அடிப்படையில் தீர்வு காண்பது என்பதே, இரு கட்சிகளுக்கும் பிரச்சினையாக உள்ளது.

ஜனாதிபதிக்கும் தமக்கும் இடையில் நடைபெற்றுவரும் கடிதப் பரிமாற்றம் ஒரு சம்பிரதாயபூர்வமானது. அதன்மூலம் எந்தவித பயனும் இல்லையெனவும் பிரதம மந்திரி தெரிவித்தார். (01)

## நாற்சந்தி



பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில் சிறிலங்காவின் இராணுவத்திற்கு ஏற்பட்ட படுதோல்விகள் மற்றும் பின்னடைவுகள் குறித்து - ரணில், சந்திரிகாவுக்கு எழுதிய காட்டமான பதில் அவருக்கு கடும் சுகயீனத்தை ஏற்படுத்திவிட்டதோ? ஹெல்கிஸனுடனான சந்தப்பை சுகவீனம் என காரணம் காட்டி சந்திரிகா ரத்துச்செய்துள்ளார்.

அது கிடக்கட்டும். அந்தக் கடிதம் பற்றிப் பார்ப்போம்.

'மேற்படி ரணிலின் கடிதத்தில் குறிப்பிட்ட சம்பவங்களில் எந்தவித உண்மையுமில்லை' என ஜனாதிபதி செயலகம் அறிக்கை விடுத்துள்ளது.

அப்படியானால் முல்லைத்தீவுத்தோல்வி, கிளிநொச்சித் தோல்வி, ஆனையிறவு வீழ்ச்சி, வன்னி இழப்பு, கட்டுநாயக்க அழிவு எல்லாம் பொய்யென்றா அம்மா சொல்கிறார்?

"சே... அப்படிப் பொய்சொல்வாரா சந்திரிகா... அதெல்லாம் அவவின் ஆட்சிக்காலத்திலா நடந்தது... அவவின் பேரைச் சொல்லி ரத்வத்தை, தளுவத்தை, பலகல்ல. ஆகியோர் 'இராணுவ நடவடிக்கையை நடத்திய காலத்திலல்லா நடந்தது. அதற்கு அவரைக் குற்றம் சொல்லலாமா ?"-என்கிறார் ஒரு சந்திரிகா விசுவாசி.

"ஓமோம் வெற்றிகளுக்கெல்லாம் ராணி தான்... தோல்விகளுக்கெல்லாம் பொறுப்பு அவர்கள்..." இது தான் சந்திரிகா தத்துவம் என்கிறார் சந்தியில் பஸ்ஸுக்கு காத்து நின்ற இன்னொருவர்..."

-தெருவாசி

# முஸ்லிம் பிரதிநிதிகளை கருணா இன்று சந்திப்பார்

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தளபதி கேணல் கருணா கலந்து கொள்ளும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் - முஸ்லிம் தரப்பு பிரதிநிதிகளுக்குமிடையிலான சந்திப்பு இன்று இடம்பெறவுள்ளது.

இன்று காலை 9 மணிக்கு மட்டக்களப்பு - கரடியனாறு தேனகம் விடுதியில் இடம்பெறவுள்ள இந்தச் சந்திப்பில் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யனும் கலந்துகொள்ளவிருக்கிறார்.

தமிழ்மக்களுக்கும், முஸ்லிம் மக்களுக்கும் இடையே நிலவி வருகின்ற பகைமை உணர்வைப் போக்கி, சமரச நிலையை இரு தரப்புக்கும் இடையே தோற்றுவித்தலே, இந்தச் சந்தர்ப்பத்தின் நோக்கமாகும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச,ய)

### சமாதான...

இந்தச் சந்திப்பில் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனுடன், புலிகளின் சமாதானச் செயலக உதவிப் பணிப்பாளர் செல்வியும் கனேடியத் தூதுவருடன் தூதரக அதிகாரிகளான எலிசபெத் கோல்டின், வில்லியம் ஆகியோரும் பங்குபற்றினர்.

### பொலிஸார்...

றது. நிபந்தனைகள் எதுவுமின்றி பொலிஸ் உத்தியோகத்தர்களை விடுதலை செய்ய விடுதலைப் புலிகள் இணங்கியதாக, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மேலும் தெரிவித்தார்.

## பேரவை உறுப்பினர்களுக்கான கூட்டம்

யாழ்.மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவையினருக்கான கூட்டம், நாளை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. யாழ்.வலயகல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில், அண்மைக்காலத்தில் பேரவையினரால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள், மேற்கொள்ளப் படவிருக்கும் செயற்பாடுகள் பற்றி பொதுச்சபை உறுப்பினர்களுக்கு விளக்கப்படவுள்ளது.

எனவே, நாளை நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்திற்கு, சகல பேரவை உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு, பேரவையின் செயலாளர் பொ.கமலநாதன் கேட்டுள்ளார்.

## கலந்துரையாடல்

வலி.வடக்கு பொதுஅமைப்புக்களின் ஒன்றியக் கலந்துரையாடல், இன்று மாலை 3 மணிக்கு தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்கத் தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

ஒன்றியத் தலைவர் சி.சிவமகாராசா தலைமையில் நடைபெறும் இந்தக் கலந்துரையாடலில் - வலி. வடக்கிலுள்ள இடம்பெயர்ந்த மக்களின் பல்வேறு பிரச்சினைகள் சம்பந்தமாக ஆராயப்படவுள்ளது. சகல ஒன்றிய உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு, சி.சிவமகாராசா கேட்டுள்ளார்.

## ரணில் இன்று பயணம்!

(கொழும்பு)

ஐ.நாடுகள்சபையின் 58 ஆவது வருடாந்த மாநாட்டில் பங்குபற்றுவதற்காக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று வொஷிங்ரன் பயணமாவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

### சமாதான முயற்சி...

வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகம் நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக அரசாங்கம் முன்வைத்துள்ள பிரேரணைகளை விடுதலைப் புலிகள் பரிசீலனை செய்துவருவதை வரவேற்ற பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர், சமாதானப் பேச்சுவார்த்தைகளில் அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் அக்கறையோடு செயற்படவேண்டும் என்றும் தெரிவித்தார்.

# இனம் தெரியாத சடலம் வவுனியாவில் கண்டெடுப்பு

வவுனியா - செட்டிகுளம் பிரதேசத்திலுள்ள, அரசடிகுளம் காட்டுப் பகுதியில் இனந்தெரியாத ஆணின் சடலமொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் காட்டுப் பகுதியில் விளாம்பழம் எடுக்கச் சென்றபோது, மக்கள் கொடுத்த தகவலையடுத்து செட்டிக்குளம் பிரதேச பொலிஸாரினால் இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது. தலையில் கத்தியால் வெட்டப்பட்ட நிலையில் அந்தக் கத்தி தலையிலேயே கிடந்தது. அத்துடன், சடலத்தின் நெஞ்சுப் பகுதிக்கு மேல் எரிபொருள் ஊற்றி எரித்துள்ளதனால், சடலம் அடையாளம் காண முடியாதுள்ளது. இந்தக் கொலை மூன்று நாட்களுக்குள் நடந்திருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (03)

# கொழும்புக்குள் 840...

பாதையில் இட்டுச் செல்வதற்காகவே இவ்வாறான குற்றச்சாட்டுக்களை எழுப்புவதாகவும் அவர் கூறினார்.

ஆரம்பத்தில் சமாதானம் குறித்து கதைத்துவிட்டு, பின்னர் யுத்தத்தை தீர்வாகவைத்த மங்கள சமரவீர போன்றோர் முன்வைக்கும் இந்தக் கருத்துக்கள் தொடர்பாக, மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுமானால் , முப்படைகளின் தளபதியாகக் கருதும் ஜனாதிபதியே இதற்கு முதலில் பொறுப்பேற்க வேண்டும் என்றும், அவர் தெரிவித்தார்.

எனினும், பாதுகாப்பு அமைச்சுக்குப் பொறுப்பாக அமைச்சர் ஒருவர் இருப்பதால், உன்னிப்பாக இருப்பதோடு, பொய்ப்பிரசாரங்களை மேற்கொண்டு மக்களைக் குழப்ப வேண்டாம் என்றும், அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

# போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு...

தில் முஸ்லிம் மக்களின் எவ்வித செயற்பாடுகளும் நடைபெறவில்லை. தற்போது முஸ்லிம் மக்கள் தமது செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இன்று இந்த ஊடகவியலாளர் சந்திப்பை, குரங்குப்பாஞ்சான் முகாம் அமைந்துள்ள பிரதேசத்திலேயே நடத்துவதற்கு த்திட்டமிட்டிருந்தோம். ஆனால், போக்குவரத்துத் தடங்கல்கள் காரணமாக அங்கு எம்மால் இதனை நடத்த முடியவில்லை. இம் முகாமுக்கு விரைவில் ஊடகவியலார்களை அழைத்துச் செல்வோம்.

போர்நிறுத்த உடன்படிக்கையின் பின்னர், நாம் 13 புதிய முகாம்களை அமைத்துள்ளதாக அரசியல்வாதிகள் சிலர் திட்டமிட்டு பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். நாம் புதிதாக எந்த முகாம்களையும் அமைக்கவில்லை. எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் அரசியல் நடவடிக்கைகளுக்காக அமைத்த அலுவலகங்களைக் கூட அவர்கள் புதிய முகாம்கள் எனக்கூறி வருகின்றனர். தோப்பூர் பகுதியில் முகாம் அமைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அது ஒரு முஸ்லிம் பிரதேசம். நீங்கள் வரும்போது இப்பிரதேசத்தை பார்வையிட்டிருக்கலாம். இதுபோன்று சின்னக்கிண்ணியாவும் முஸ்லிம் பிரதேசம். அங்கும் நாம் முகாம் அமைக்கவில்லை. திருகோணமலை இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசமான ஆண்டான்குளம் பகுதியில் முகாம் அமைக்கப்பட்டதாக, விசமப் பிரசாரம் செய்யப்பட்டது. அங்கு சென்று பார்த்த இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் யானைகளையும், எருமைகளையுமே கண்டு வந்தனர். அங்கு எந்த முகாம்களும் அமைக்கப் பட்டிருக்கவில்லை என, புத்த பிக்கு ஒருவர்கூட அறிக்கை விட்டிருக்கிறார். இருப்பினும் விசமப்பிரசாரம் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

வனவிலங்குகளைப் பாதுகாக்கும் பிரிவு ஒன்று எம்மால் செயற்படுத்தப் பட்டு வருகின்றது. அவர்கள் வனபரிபாலனத்தில் மிகவும் கட்டுப்பாட்டுடன் இருக்கின்றார்கள். அங்கு பச்சை மரங்கள் வெட்டப்படுவது சட்டவிரோதமாகும். இது இலங்கை அரசாங்கத்தின் நிர்வாக பிரதேசத்திலும் உண்டு. இவற்றை அழிப்பவர்கள் மீது நாங்கள் கடுமையான தண்டனை விதிக்கின்றோம். இதற்காக அவ்வாறானவர்களிடம் இருந்து தண்டம் அறவிடப்படுகின்றது.

நாம் சமாதானத்தின்பால் மிகுந்த ஈடுபாடு கொண்டிருக்கின்றோம்.

நாம் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் எந்த முகாம்களையும் அமைக்கவில்லை. இதனை தெளிவுபடக்கூறுகின்றோம்.

இராணுவப் பிரதேசத்தில் முகாம்கள் அமைக்க முடியாது என்பது போர்நிறுத்த உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள விடயம். எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் முகாம்கள் அமைப்பதில் தவறில்லை.

போர்நிறுத்த உடன்படிக்கையின் பின்னரான காலத்தில் திருகோணமலை மாவட்டத்தில் எமது போராளிகள் 25 பேர் படையினராலும், பொலிஸாராலும் கைது செய்யப்பட்டுள்ளனர் . இவர்கள் கட்டம் கட்டமாக விடுவிக்கப்பட்டுள்ளனர். இன்னும் 3 போராளிகள் அவர்களது காவலில் இருக்கின்றார்கள். எமது கட்டுப்பாட்டில் ஒரே ஒரு கடற்படைச் சிப்பாயே இருக்கின்றார். அவரை கைதிகள் பரிமாற்றும் நடவடிக்கைக்காக வைத்திருக்கின்றோம்.

முஸ்லிம்களினதும், தமிழ்மக்களினதும் தனிப்பட்ட விரோதங்கள் அரசியல் ரீதியாக்கப்பட்டு, விடுதலைப் புலிகளுக்கும் முஸ்லிம்களுக்குமான விரோதமாக மாற்றப்படுகின்றது. எமக்கிடையே முரண்பாடுகள் இல்லை. இவை தற்போது தீர்க்கப்பட்டு வருகின்றன. முஸ்லிம் பிரதேசத்திலுள்ள ஒருவர் பிரச்சினைகளைக் கையாளாமல் வேற்று மாவட்டத்தைச சேர்ந்தவர்கள் அதனைக் கையாள்வதன் காரணமாக, பிரச்சினைகள் பெரிதாகின்றது. அரசியல் லாபமே இதற்குக் காரணமாகின்றது.

யுத்தம் நிறுத்தப்பட்டபோது சிங்கள மக்கள் எம்முடன் உறவாடும் போது - ஈ.பி.டி.பியினரும், புளொட் இயக்கத்தினரும் வெளியில் நடமாட முடியாதநிலை பற்றி அவர்களே சொல்ல வேண்டும். ஒப்பந்தத்தின் பின்னர் நடைபெறும் சூட்டுச் சம்பவங்களுக்கும் எமக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. இவை நடப்பது அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில். இது பற்றி அவர்களே பதில் கூற வேண்டும் எனப் பதுமன் தெரிவித்தார்.

அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக் கருத்துத் தெரிவிக்கையில்,

எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் 75 வீதமான மக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழேயே வாழ்கின்றார்கள். இவர்களுக்கு தொழில் வசதிகள் இல்லை. உபகரணங்கள் இல்லை. போக்குவரத்துச் செய்யக்கூடிய வீதிகள் இல்லை. பல சிக்கல்களுடன் இருந்து வருகின்றார்கள். சமாதான ஒப்பந்தத்தின் பின்னர் மக்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. ஆனால், மாற்றம் இன்னமும் ஏற்படவில்லை. எமது மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் செல்லவேணடும். இதற்காக இடைக்கால அரசு எமக்கு வரவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம் என்றார். (04)



(சி/1203)

மஹஜன சம்பத
பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1548 திகதி: 19.09.2003

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 0 | 7 | 3 | 1 | 9 | 0 | 5 |

(சி-1432)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 20.09.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.